# போர்வாள்

4] [ விச்சு 1

உணவு உணவு எனப் பதைக்கின்றனர் மக்கள் !




வெறும் காகிதத் திட்டங்களை நீட்டுகிறார் முன்ஷிஜீ !

...ர்கள்:- காஞ்சி, மணிமொழியார்.
மா. இளஞ்செழியன், B.A. (HONS)

விலை 2 அணா

Best copy available.

# கழகச் செய்திகள்

### செம்பனூர்கோவில் தி. மு. க.

இந்த வருடத்திற்குச் செம்பனூர் கோவில் தி. மு. கழகம் கீழ் கண்டவர்களைச் செயற்குழுவினராகத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

செயலாளர்: T. P. ஆறுமுகம். உதவி செயலாளர்: C. புருஷோத்தமன், நிதி உறுப்பினர்: A T. S. குப்புராமன். உதவி நிதி உறுப்பினர்: S சிதம்பரம், விளம்பர உறுப்பினர்: S P. துரைஅரசன், நிர்வாக உறுப்பினர்கள்: பி தர்மலிங்கம், P. பொன்னரங்கன், ஜி. தம்பித்துரை, G. கலியபெருமாள், எஸ். ரெத்தினம், T. K. ராமலிங்கம், S. U ராதா கிருஷ்ணன், V. மணி, T மணி, M. கோவிந்தராசன்.

### கோலார் தங்கவயலில் திராவிட முரசொலி!

10—12—50 ஞாயிறு மாலை 6 மணி அளவில், மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த கோலார் தங்கவயலில், அவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் சிறப்புறநடைபெற்றது. தங்கவயல் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு குழுமியிருந்தார்கள்.

தோழர் என். சி. சபாபதி கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

தோழர்கள் இராபர்ட் வில்லியம், இரத்தினம், இரா. ஆதிமூலம், மாணவத்தோழர் இன்பதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பிறகு, தங்கவயல் தி. மு. க. செயலாளர் தோழர் டி.கே சின்னதுரை, திராவிடநாட்டுப் பிரிவினையின் இன்றியமையாமையை இனிது விளக்கித் தெளிவுரை பகர்ந்தார்.

இறுதியில், "போர்வாள்" ஆசிரியர் மா. இளஞ்செழியன் B A (Hons) கம்யூனல் ஜி. ஓ. வின் அவசியம்-அது அழிந்தால் நேரிடக்கூடிய அவதி—அதுஉருவாவதற்கு முன்னும் பின்னும் திராவிட சமுதாயம் இருந்த, இருக்கிற நிலை ஆகியவற்றைக் குறித்தும், ஆளவந்தார்களின் அடக்குமுறை தர்பார் குறித்தும் சுமார் 1½ மணிநேரம் விளக்கவுரை ஆற்றினார்.

தோழர் இராகுலன் நன்றி கூற, கூட்டம், இரவு 8 மணிக்கு இனிது முடிவுற்றது.

### திருமால்பூர் தி. மு. க.

5-12-50 அன்று அரக்கோணம் தாலுக்கா திருமால்பூர் திராவிட முறனேற்றக் கழகச் செயற்கூட்டம் தோழர். ஜெயராமன் தலைமையில் கூடிக் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

1) தமிழ்க்கடல் மறைமலை அடிகள், அறிஞர் வ. இராமசாமி, அறிஞர் பெர்னாட்ஷா மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறது.

2) 23-10-50. அன்று ஆச்சாரியாருக்குக் கருப்புக் கொடி காட்டும்போது இரக்கமின்றி அடித்தது பற்றியும், குன்றத்தூரில் குண்டுமாரி பொழிந்தது பற்றியும் சென்னை சர்க்காரை இக் கூட்டம் கண்டிக்கிறது. சிறைசென்று மீண்ட தோழர்களைப் பாராட்டுகிறது.

3) புதிய ஆண்டுக்கான செயலாளராக தோழர். S.குமாரசாமியும், துணைச் செயலாளராக தோழர். K. G. நாராயணசாமியும், பொருளாளராக தோழர். S. வடிவேலும், விளம்பர உறுப்பினராக தோழர். T. குப்பனும் மத்தியக் கமிட்டி உறுப்பினர்களாகத் தோழர்கள் M. ஜெயராமன், அந்தாரி, கமலக் கண்ணன், சண்முகம், கோபால்சாமி ஆகியோரும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

### வள்ளவனூர் (தெ. ஆ)

#### புதிய கிளை

19-11-50 அன்று தோழர் ராமானுசம்தலைமையில் தி.மு.க கழகம் அமைக்கப் பட்டது செயலாளர்: முத்து பெருமாள். துணைசெயலாளர்:— ந. நாமதேவன். பொருளாளர் இரா. இளஞ்சோழன். விளம்பர உறுப்பினர்: ந. கண்ணன் செயற்குழு உறுப்பினர்கள் தோழர்கள்:—இரா. மு. நடராசன், K. கண்ணன், சாமிக் கண்ணு, கணபதி, அப்துல்லா பழனி ராமானுசம், N. K. S கிருட்டினசாமி முதலியோர்.

### கன்னட மாவட்ட மத்திய திராவிட முன்னேற்றக் கழகம்

## செயற்குழுக் கூட்டம்

கன்னட மாவட்ட திராவிட முன்னேற்றக் கிளைக்கழக தோழர்களுக்கு அறிவிப்பு. அன்புடையீர் மேற்,படிமாவட்ட செயற்குழு கூட்டம் 17-12-50 ஞாயிறு மாலை 5 மணிக்கு நடைபெறும். அனைவரும் இதனையே அழைப்பாகக் கொண்டு கூட்டத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**இடம்:** திராவிட முன்னேற்ற கழகம். 167-A அக்கிப்பேட்டை பெங்களூர். 2.

அதுசமயம் மாவட்டக் கமிட்டி திறமையாகப் பணியாற்ற வழி வகுத்தல்—மாகாடு நடத்த யோசித்தல் ஆகியவைகள் விவாதிக்கப் படும்.

T. K. சின்னதுரை
விளம்பர செயலாளர்

## தோழமைக் கழகம்

[10-வட்டம்]

17-10-50. ஞாயிறு காலை 10 மணிக்கு 83, தையப்ப முதலி வீதியில், "தோழமை" என்னும் பொருள் குறித்து தோழர் என். கசபதி தலைமையில் சொற்பயிற்சி கூட்டம் நடைபெறும்.

**அனைவரும் வருக.**

சிறுகதை :

# சமுதாய பலிபீடம்

["குறளன்"—குடியேற்றம்.]

முல்லை :

நான் விதவை, சமூகத்திலே இனி வாழத் தகுதியற்றவள் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட விதவைதான் நான். என் சிறிய வயதிலே — அறியாப் பருவத்திலே எனக்குத் திருமணம் நடந்தது. அதுகூட எனக்குச் சரிவர நினைவில்லை. நாளடைவில் நான் வளர்ந்து வந்தேன். என்னை மாலையிட்ட மணவாளர் இடையில் மாண்டார். அதனால் நான் விதவையானேன். அன்றொரு நாள்நான் மங்கைப்பருவமடைந்தேன்.

"அதோ, பயருடா! அவள் கற்கண்டு கட்டிமாதிரி இல்லை! ஆகா! என்ன அழகு! என்ன அழகு!!"

"அவள் ரம்பைதாண்டா!"

"அழகியென்றால் அவள்; அல்லவா அழகி!"

"இன்பச் சுரங்கம் அவளே தான்."

"தங்கத் தகடுபோல்--வானத்தின் வெண்மதிபோல்—அழகின் தெய்வமாக விளங்குகின்றாள்."

இப்படியெல்லாம் என்னைக் கண்டு வர்ணித்தனர் அக்கம் பக்கத்திலிருக்கும் வாலிபக் காளைகள் சிலர். உண்மையில் நானும் என் அழகைக் கண்டு பரவசமடைந்தேன்; பெருமிதம் கொண்டேன்; ஏன்? பொறாமையும் கொண்டேன் உலகத்தில் நான்தான் தன் நிகரற்ற அழகி என்றெண்ணி! ஆனால், சமூகம் தான் என் எண்ணத்தைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டது; என்னை 'விதவை'யாக்கிவிட்டது. இனி நான் வாழமுடியாதவளாகிவிட்டேன். ஆனால், இரவும்-பகலும் ஏதோ ஒரு 'உணர்ச்சி' என்னை வாட்டி வதைத்து வந்தது. துடித்தேன், படுக்கையில் புரண்டேன், 'இன்ப' வேதனையால்! என்பருவத்தின் உணர்ச்சி என் நெஞ்சைக் கிளர்ச்சி யூட்டியது. அதற்கு நான் 'அடிமை'யானேன்.

* * *

அன்று பகல் 12-மணியிருக்கும். பக்கத்து வீட்டு சுந்தரி என்னிடம் வந்தாள். அவள் என் இன்னுயிர்த் தோழி! நான் அப்போது படுக்கையில் விம்மிக் கொண்டிருந்தேன், வழக்கம் போல்!

"முல்லை, முல்லை!"

நான் பேசவில்லை.

"ஏண்டீ! என்ன உடம்பிற்கு?"

"ஒன்றுமில்லை! ஹா...." இது என் இன்பத் துடிப்பு!"

"என்னிடம் கூடவா? சொல்லு முல்லை!"

"தலைவலி" என்று ஒரு 'பொய்யை'ச் சொன்னேன்.

"தலைவலியா, மன வலியா?"

"ஏண்டீ, கிண்டலா செய்கின்றாய்?"

"எல்லாம் எனக்குத் தெரியுமடி! என்னிடமே நடிக்கின்றாயே!"

அவள் என் நிலையைப் புரிந்து கொண்டாள். நானும் மறைக்கவில்லை. எப்படி முடியும்? பெண் உள்ளத்தை பெண் அறிய முடியாதா என்ன!

"முல்லை! வருந்தாதே. உன்னை விதி—சதி செய்து விட்டது" என்றாள் என் தோழி! சற்று அனுதாபக் குரலில்!

"விதி, விதி! எது விதி? சுந்தரி, நீகூடவர் 'விதி'யை நம்புகின்றாய்? சமூகத்தின் 'சதி'யை நீ அறியவில்லையா? என் கணவன் மாண்டது என் குற்றமா? நான் பெண்ணாய்ப்பிறந்தது என் குற்றமா? இன்பத் துடிப்பால், இரவும் பகலும் என்னை வாட்டி வதைக்கும் உணர்ச்சிக்கு அடிமையானது என் குற்றமா? விதிக்கும், என் வாழ்க்கைக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? என் வாழ்வைப் பாழ்படுத்தியது சமூகமா? விதியா?" நான் ஆத்திரமாக—ஆவேசமாகக் கத்தினேன்.

"முல்லை! உன்னுடன் தர்க்கிப்பது என்னால் இயலாத காரியம். அது சரி! இன்று நல்லூர் பேட்டையில் புஷ்பப் பல்லக்காம், நீ வருகின்றாயா?"

நான் மறுத்தேன்! அவள் வற்புறுத்தினாள்! முடிவில் இணங்கினேன்.

* * *

அன்றிரவு நானும் சுந்தரியும் புஷ்பப் பல்லக்கைப் பார்க்கப் போனோம். திரளான கூட்டம்! ஒருவரையொருவர் ஆடவரும், பெண்டிரும் 'இடித்துக் கொண்டு' போவது அங்கு 'சகஜ'மாக நடைபெற்றது. சுந்தரியும் நானும் அந்தக் கூட்டத்

தின் மத்தியில் பிரிந்துவிட்டோம். என் மனதில் 'திகில்' பற்றியது. நான்சுந்தரியைத்தேடினேன். அவள் கிடைக்கவில்லை. இனிநான் ஒண்டியாக வீட்டிற்கு எப்படிப்போவது? என்று திகைத்தேன், தடுமாறினேன். என் பின்னலிருந்து என்னை யாரோ இடித்துக்கொண்டு வந்தனர். நான் உடல்பதைத்துத் திடுக்கிட்டுத் திரும்பினேன். அவனொரு வாலிபன் எனக்குத் தெரிந்தவன்கூட! அவனும் எங்கள் வீதியில் வசிப்பவன்தான்! நான் அவனைப்பார்த்தேன்! அவன் என்னைப் பார்த்தான்—புன்சிரிப்புடன்! என்னல் ஒன்றும் புரிந்துகொள்ளமுடியவில்லை முடிவில் அவன் துணைகொண்டே வீட்டைநோக்கி நடக்க ஆரம்பித்தேன். நாங்கள் வந்துகொண்டிருந்த ரோட்டின் அருகாமையில் ஒரு வற்றிய ஆறு! அவன் என்னை அந்தவழியாக அழைத்துச் சென்றான். மேலும் அந்த ஆற்றைததாண்டினல்தான் நான் பிச்சனூர் பேட்டையடையமுடியும். அங்குதானே என்வீடும்!

இரவு நடு நிசி! விண்ணிலே வெண்மதி தவழ்ந்துகொண்டிருந்தது. தென்றல் காற்று 'ஜில்' லென்று வீசிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றைச் சுற்றிலும் தென்னந்தோப்புகள் சூழ்ந்திருந்தன. அங்கே இருள் கவ்விக்கொண்டிருந்தது. நான் அவ் 'வாலிப' னுடன் நடந்து கொண்டிருந்தேன் அந்தஇடத்தில்எங்களைத் தவிர்த்து ஜனநடமாட்டமில்லை. சட்டென்று அந்த 'வாலிபன்' கரங்கள் காரணமின்றி என் 'மார்பின்' மேல் தவழ்ந்தன. நான் சித்தம் குலைந்தேன். உணர்ச்சி என்னைத் தாக்கியது. நான் என்னையேமறந்தேன். பிறகு அந்த'வாலிபன்'கைப்பொம்மையானேன். என் 'கற்பு' அந்த ஆற்றின் மணல் 'மெத்தை'யில் அவனல் அழிக்கப் பட்டது,

அன்றிலிருந்து நானும் அவனும் 'கள்ளக் காதலர்'களானேம். நாட்கள் பல உருண்டோடின. நான் அடைந்து வந்த 'இன்பம்' பின்னுள் எனக்குத் துன்பத்தைக் கொடுத்தது. அவனை அதுபாதிக்கவில்லை. நான் 'கர்ப்பிணி'யாக உழன்றேன், அவன் சுதந்திர புருஷனைத்திரிந்தான் என் கவலையை மறந்து! ஊர் என்னை மிரட்டியது! சமூகம் தன தூற்றலை ஆரம்பித்தது 'விபசாரி' என்று! நான் என் காதலனைச் சந்தித்து என் 'கர்ப்பநிலை'யை வேதனையுடன் கூறி, விரைவில் என்னை மணந்துகொள்ளவேண்டினேன். உடன் என் தலையில் 'இடி' விழுந்தாற்போலிருந்தது அவன் சீற்றல்! ஆம்! அவன் என்னை வஞ்சித்துவிட்டான் துரோகி! நான் அவன் கால்களைப் பிடித்துக்கொண்டு வாதாடினேன்.

"என்ன மிஞ்சுகிறாயா?"

"இல்லை, கெஞ்சுகிறேன்."

"நன்றாய் நடிக்கின்றாய்!"

"உங்கள் நடிப்பைக் கண்டு 'மருட்சி' யடைகின்றேன்."

"ஹூம்!...விடு என்னை."

"முடியாது!"

"என்ன! பிடிவாதமா செய்கின்றாய்?"

"என்னை வஞ்சிப்பது நீதியா?"

"இது நீதிமன்றமல்லடி, உனக்கு நீதி வழங்க!"

"காதல! என்னை......"

"பேசாதே! கொன்றுவிடுவேன்."

"அன்று ஆசையாய் அணைத்த கரங்கள், இன்று 'கொல்ல' வும் துணிகிறதா...! கொன்றுவிடுங்கள். அதுவும் உங்கள் கரங்களாலேயே மடிவதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றேன். சமூகம் என்னை 'விபசாரி' என்று தூற்றுவதை--நான் கேட்காமலிருக்க வேண்டுமானல், நான் சாகத்தான் வேண்டும்! நான் இறந்த பிற யார் எதை வேண்டுமானலும் சொல்லிக் கொள்ளட்டும் கவ யில்லை! ஏன் நிற்கிறீர்கள்? நட கட்டும்! என்னைக் குத்திக் கொ லுங்கள்!"

"முல்லை!" என்று சீறின அவன்!

"சீ! துரோகி!" என்றே நான்.

அவ்வளவுதான்! 'பளா பளார்' என்ற அறைகள் எ கன்னத்தைத் தாக்கின! கா லன் 'காதக'னைகமாறி கா பிடித்த என்னை எட்டி உதை தான் அடிவயிற்றில்! அவ உதைத்த உதை தாங்க முடிய மல் மூர்ச்சையாகி தரையி சாய்ந்தேன். மறுபடி நான் க விழித்தபோது அவனை அங்கு காணவில்லை. காதகனு மோசம் போன நான் இன வாழவிரும்பவில்லை! 'மான தை' இழந்த பின் எனக்கு வா வேது? என் வாழ்வு அஸ்தமித் விட்டது. வஞ்சனை எனும் 'ப பீடத்தில் ஏற்றப்பட்டு வி டேன் நான். உலகம் என் 'சதி' செய்துவிட்டது. பு பட்டேன் கிணற்றையும், குள தையும் தேடி...!

**சந்தர்:**

முல்லை ஒரு அழகிய மல தான்! அவள் எங்கள் தெரு குக்கடைசிவீட்டில் வசித்து வ தாள். நான் அவளை முத முதல் கண்டதும் அவளழகி சொக்கிவிட்டேன். அவள் நி வாக இரவும்—பகலும் துடித் வந்தேன். என் ஆசைக்கன அன்று நல்லூர் பேட்டை தி விழாவின் போது நினைவாகியத முல்லை என்னை மனமார காதலித்தாள்; என் சுகத்தை தன் சுகமென்று நினைத்தா எனக்குக் களைப்பின்றி இன்ப ளித்தாள். நானும் அவளை 'வஞ் சிக்க' வேண்டும் என்று கனவி கூட கருதியதில்லை. நான் இன

ப்பட்டேன்! அவள் துன்பப்பட்டாள்! நான் உல்லாசமாகத் திரிந்தேன்! அவள்நெஞ்சில்பாரத்துடன் நடைப்பிணம் போல் லவினுள்! ஆம்! இந்தப் பாவின் கூட்டுறவால், அவள் கர்ப்பம் தரித்தாள்! என்னிடம் கெஞ்சினுள், தன்னை விரைவில் மணந்து கொள்ளுங்கள் என்று! துரோகி நான், காலைப்பிடித்த அவளைக் காலால் எட்டி உதைத்தேன்! ஏசினேன்! நாக்கில் நரம்பின்றித் தூற்றினேன்! அவள் ரோஜாக் கன்னங்கள் சிவக்க அடித்தேன் என் தந்தையாரின் 'பாதனை' என்தலைக்கேறிய தால்! அவள் இன்று துடிதுடிக்கின்றுள்; நான் அவளைப்பற்றிக் கவலையில்லாமலிருக்கின்றேன். அவள்'கற்பை'க் குலைத்த என்னைச் சமூகம் தூற்றவில்லை! ஆனால், அவளைத்தூற்றுகின்றது.

**ரவிந்தராஜூ:**

என் மகளை ஒரு விதவை தன் கைபொம்மையாக்கப் பார்த்தாள்! அவள் விதவை மட்டுமல்ல; விபசாரி! விபசாரி மட்டுமல்ல; யாரையும் எளிதில் மயக்கும் தந்திரக்காரி! நானே அவளிடம் 'சொக்கி' விட்டேன் என்றால்...வாலிபனுகிய என் மகனைக் கேட்கவா வேண்டும்! பாடிப்பயல் அவளைக் கண்டு மயங்கிவிட்டிருக்கின்றுன். அது நடக்குமோ? அவளையே மணப்பதாகவேறு என்னிடம் கூறினுன். அவர்'செட்டியார் அவன்'பாச்சா' பலிக்கும்? சாஸ்திரசமுதாயத்தை விளக்கி—அவன் கன்னத்தில் இரண்டு அறை கொடுத்து, அடித்தேன்! விரைவில் அவனுக்கு வேறு இடத்தில் ஒரு 'மோஹினி' போன்ற பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்து வைக்கின்றேன் என் பையன் பயல் எதிர்த்து வாதிட்டான். விட்டு விடுவேனு? தடியைக் காட்டிப் பயமுறுத்திப் பணத்தைக் காட்டிப் பல்லிளிக்கச்செய்தேன். பயல் மயங்கியே போய்விட்டான்! எப்படி? என் சொக்குப்பொடி பலித்தது! பலிக்காமல் போகுமா?

**சுந்தர்:**

எனக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டது. ஏனே என் மனம் அமைதியின்றித் தவிக்க ஆரம்பித்தது. ஒவ்வொரு இரவும் அப் பேதைக்கு நான் அளித்த இன்பத்தின்போது, அவள் என்னிடம் பேசிய இன்பப் பேச்சுக்களும், நான் அவளுக்களித்த வாக்குறுதிகளும் என் நெஞ்சைப் பிளந்தன அவள் என்னைக் கடைசி சந்திப்பின்போது 'துரோகி!' என்று கூறிய அந்தக் கடும் 'விஷ'ச் சொல் என்னை அணு அணுவாகச் சிதைக்கத் தொடங்கியது.

"முல்லை குளத்தில் விழுந்து மாண்டாள்!"

இந்த வாசகம் என்னைத்திடுக்கிட வைத்தது! நான் என்னையுமறியாமல் கதறிவிட்டேன்! என் தந்தை 'கவலைவிடுடா!' என்றார்! நான் துடித்தேன்! என் தந்தை "ஒழிஞ்சது உன்னைப் பிடித்திருந்த பீடை என்று எண்ணிக்கோ"என்றார்! ஆனால்,


புதிய புத்தகம்! அழகிய வெளியீடு !!

"போர்வாள்" ஆசிரியர்

**மா. இளஞ்செழியன் B. A. Hons.**

இயற்றிய

## சரிந்த சாம்ராஜ்யம்

அருமையான கருத்துக்களை இனிமையான தமிழில்தரும் சரிதம் தழுவிய சிந்தனை ஓவியம்.

★

மராட்டிய மண்டலம் ஆரிய மாயையால் ஆட்டிப் படைக்கப்பட்ட அக்கிரமத்தை விளக்கிக் கூறும் அழகிய நூல்

சிறந்த வாளாயுதம் வெறும் புல்லாயுதத்திற்குப் பணிந்துவிட்டது—அது எப்படி?

மாவீரன் சிவாஜியை ஒரு மதகுரு, தன் மனம்போன வண்ணம் நடக்கவைத்தான்—அது எவ்வாறு?

வீரம் தாழ்ந்தது : வஞ்சகம் வென்றது—அது ஏன்?

இந்தக் கேள்விகட்கு ஒரு பதில், "சரிந்த சாம்ராஜ்யம்"

விலை அணு 0 10 0 தபாலில் 0 12 0

வணிகர்க்குத் தக்க கழிவுண்டு.

**பகுத்தறிவுப் பாசறை**

பவழக்காரத் தெரு :: சென்னை. 1.

என்றால் அப்படி எண்ணிக் கொள்ள முடியவில்லை. என் மனச்சாட்சி என்னைக் குத்திக் கொன்றது. அந்த வேதனை தாள முடியாமல், 'ஐயோ! முல்லை, முல்லை' என்று கதறிக் கொண்டே ஓடினேன் என் அழகு முல்லையைத் தேடி!

முல்லை பிணமாக — அலங்கோலமாக—பார்க்கப்பயங்கரமாக நிர்கதியாகக் கிடந்தாள். அவள்பிணத்தைச் சுற்றிலும் மனிதக் கூட்டம்! அவர்களிடையே இந்த வசை மொழிகள்:

'விபசாரி!

'மானங்கெட்டவள்

'குடிகேடி

'பாவி

'ஜாலக்காரி

'தளுக்குக்காரி

இப்படி பலதரப்பட்டவை. அங்குக் குழுமியிருந்த மக்கள் மடையர்கள்; அறிவிலிகள்; சமூகத்தின் சதிகாரப் பிரதிநிதிகள்! இறந்து கிடந்த அப் பிணத்தைப் பார்த்து 'விபசாரி' என்று தூற்றமட்டும், அலறமட்டும், கர்ஜிக்கமட்டுமே தெரிந்து வைத்துக்கொண்டிருந்தனரே தவிர, அவள் ஏன் விபசாரியானாள்; யாரால் ஆக்கப்பட்டாள் என்பதை அங்கிருந்த ஒரு 'புத்திசாலி'யாவது சிந்தித்துப் பார்த்தானா? குற்றவாளியான என்னை விட்டுவிட்டு, நிரபராதியான அவளைத் தூற்றும் 'மரமண்டைகளை' அறிவாளிகள் என்பதா; அறிவிலிகள் என்பதா?

அங்குக் குழுமியிருந்த மிருக சனங்களின்மீது எனக்கு அளவிலாக் கோபம் வந்தது. கொதித்தெழுந்தேன் அவர்கள் மீது!

"அறிவாளிகளே! ஏன் நரிகள்போல 'ஊளை' யிடுகின்றீர்கள்? ஏன் அலறிச் சாகின்றீர்கள்? போதும்! நிறுத்துங்கள் உங்கள் வசைமொழிகளை! கள்ளுக்கும், பாலுக்கும் வித்தியாசம் தெரியாத மடையர்களே! இருளுக்கும், ஒளிக்கும் இலக்கணமறியாத முட்டாள்களே! குற்றவாளியைவிட்டு, நிரபராதியைத் தூற்றுவதேன்? இதோ, நாதியற்று இறந்து கிடக்கின்றாளே, அவள் விபசாரியானதற்குக் காரணம் நான்! ஏன் விழிக்கின்றீர்கள்? புரியவில்லையா? சரி; பச்சையாகக் கேளுங்கள்; அந்தப் பெண்பேதையை மயக்கி —அவள் கற்பைக் குலைத்து வஞ்சித்த கிராதகன்தான் நான்! அவள் விபசாரியல்ல; உத்தமி! நான்தான் காமுகன்! இப்பொழுது ஆரம்பியுங்கள் உங்கள் தூற்றலை! ஹூம்! ஏன் விழிக்கின்றீர்கள்? ஏன் மருட்சியடைகின்றீர்கள்? ஏன் திடுக்கிடுகின்றீர்கள்? ஏன் திகைக்கின்றீர்கள்? நான் உங்கள் ஆண்கூட்டத்தைச் சார்ந்தவன் என்பதால், சிறிதளவு இரக்கங் காட்டுகின்றீர்களா? இல்லை உங்கள் நாக்கு வரட்சியடைந்து விட்டதா?

எடுத்துக்கொள்ளுங்கள் உங்கள் கைத்தடிகளை! வாரிக்கொள்ளுங்கள் கற்களை! வீசுங்கள் என்மீது! குற்றவாளியை ஒழித்துக்கட்டுங்கள்! என்போன்ற காமுகர்கள் என் கதியைப் பார்த்துச் சீர்திருந்தட்டும்! ஏன் விழிக்கின்றீர்கள்? ஏன் தயங்குகிறீர்கள்? நான் பாவி! அது மட்டுமா? ஒரு பெண்ணின் வாழ்வை அநீதியாகப் பாழ்படுத்தியவன்! சட்டப்படி கொலைகாரன்! எங்கே உங்கள் தண்டனை! கொடுங்கள் சீக்கிரம்! அழியட்டும் என் உருவம்! ஒழியட்டும் என் அகந்தை!"

நான் பைத்தியக்காரன்போல் அழுதேன், கூக்குரலிட்டேன், கதறினேன்! திடீரென்று ஒரு கைத்தடி என் மண்டையைத் தாக்கியது! இரத்தம் பீறிட்டது!! அடித்தவர் யார் என்றும் என்னால் அறிய முடியவில்லை. தொடர்ந்து பலமுனை கல் சப்தங்கள்! கற்கள் 'விர், விர்' என்று என்மேல் பறந்தன! நான் ஸ்வாதீனமிழந்து அருகிலிருந்த முல்லையின் பிணத்தின் மேல் சாய்ந்தேன். அவ்வளவுதான்...என் உடல்...என் உயிர் ....இயற்கையுடன் ஊசலாடிக் கொண்டிருந்தன...இனி நான் எக் காரணத்தாலும் பிழைக்க முடியாது...என் உயிர் ஊசலாடிக்கொண் டிருக்கும்போதே என் மனம் எண்ணிவிட்டது நான் சமூகத்தால் 'பலி' யாகி விட்டேன் என்று....

---

விரைவில் வெளிவருகின்றன!

**இன்பத் திராவிடத்தின் இலட்சிய ஏடுகள்!!**

ஜஸ்டிஸ் (தமிழ் வார இதழ்)
தனிபிரதி: 0—1—6
ஆண்டுசந்தா: 5—0—0

NEW JUSTICE
(ஆங்கில வார இதழ்)
தனிபிரதி: 0—2—0
ஆண்டுசந்தா: 6—0—0

தோழர் A. S. வேணுவை ஆசிரியராகக் கொண்டு பிரதி ஞாயிறு தோறும் வெளிவரும்.

முன் பணம் கட்டக் கூடிய ஏஜண்டுகள் எங்கும் தேவை.

விவரங்களுக்கு:—

**ஜஸ்டிஸ் பதிப்பகம்**
89, பிரிக்லின் ரோடு,
சென்னை-12.

AD.

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் போய் விழுந்தொழிந்தது. ....பக்தகோடிகளே, ஓலையை சம்பந்தர் ஆற்றிலிடுமுன் பாடுகிறார் ......எப்படி......?

(சாஸ்திரி பாடுதல்)

**எடுப்பு**

ஹரனே நின் பதம்
பணிந்தேன்—ஹரி (ஹரனே)
கருணாகரனே உனை
சரணடைந்தேன் (ஹரனே)

**தொடுப்பு**

எங்கும் நிறைந்த
எம் பெருமானே
கங்கையை தலையினில்
சூடிய பெம்மானே (ஹரனே)

**முடிப்பு**

பித்தனாய், பிட்சாண்டியாய்
அவதரித்த ஐயனே......
பத்தினியா வென்று
சோதிக்க அன்று—ரிஷி
பத்தினியாம் அநுசூயையை
நிர்வாணப்பிட்சைபிடசெய்து
சித்தம் குளிர்ந்த

சிவனே......... (ஹரிஹரனே) இப்படிப்பாடி, இந்த பாடலை அல்ல மெய்யன்பர்களே இதே போன்று கருத்துப்பட ஒன்றினைப் பாடி ஓலையை ஆற்றிலிட்டதும் அது நீரைக் கிழித்துக் கொண்டு சுமார் 12 கல தூரத்திற்குமேல் சென்று விட்டது. இதைத் தமது ஞானதிருஷ்டியால் உணர்ந்த சம்பந்தர், வன்னியும் மத்தமும் என்ற திருப்பாடலை பாடினதும் ஓலையானது கட்டென்று நின்றுவிட்டது. எங்கே? திருவேடகம், என்னும் ஊரில் நடுத்தண்ணீரில், அப்படியே நின்றுவிட்டது. குதிரை மீது சென்றுகொண்டிருந்த குலச்சிறையார் அதை எடுத்துக் கொண்டு மதுரை சென்று அனைவருக்கும் காட்டினார்! அப்படியிருக்க, அன்பர்களே! சைவ சமயத்தின் உயர்வையும், உண்மையையும், பெருமையையும் அனைவரும் அறிய இந்தச்சான்றுகள் போதாவோ? இந்த கைய் அளப்பரும் அற்புதத்தை நடத்திக்காட்டிச் சைவத்தின் சிறப்பை நிலைநாட்டிய பின்னரும் சில பேதை மதியினர்—ஏன், பலர், அச் சிறந்த சமய வழி நில்லாமல் வேறெந்தச் சமயங்கள்வழியோ சென்று சீரழிவு படுகின்றனரே, என்னே இவர் தம் அறியாமை.........! இது எப்படி இருக்கிறதென்றால் வழி தெரியாது நடுக்காட்டில் தத்தளிப்பவனுக்கு நல்லெண்ணங் கொண்ட ஒருவன் நேர்ப்பாதையைக் காட்டிச் சென்றும் அவனதை நம்பாது வேறு வழியே சென்று விலங்குகளுக்கு இரையானதைப் போன்ற கதையாயல்லவோ இருக்கின்றது இந்த மூடமக்களின் போக்கு......! என்ன தடுமாற்றம்?

(அருணன் கோபமாகப் பிரவேசித்தல்)

அரு: யாருக்கையா தடுமாற்றம்? நீங்களும், உங்களைச் சார்ந்தோரும்தான் நம்பமுடியாத புராணத்தை நம்பி நாசக்கடலில் வீழ்ந்து தடுமாறிக் கொண்டிருக்கிறீர்கள். நீர் சற்று முன்பு கொட்டி அளந்தீரே அந்த நீர் புளுகை மெய்ப்பிக்க முடியுமா?

[பட்டாச்சாரியார் (சாஸ்திரி) விழிக்கிறார் — பொதுமக்கள் அருணனை ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர்..........பின்பு. ...........]

அரு: அன்புள்ள தோழர்களே, சற்று முன்பு இவர் சொன்ன கதையை நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். ஆராய்ச்சி செய்து பார்த்தால் அதை விட வடிகட்டிய புளுகு வேறொன்றும் இருக்க முடியாது.

சாஸ்: ஆ! எம்பெருமான் சேக்கிழாரடிகள் இயற்றியருளிய தெய்வக் காதையான பெரிய புராணத்தையா புளுகுப் புராணம் என்கின்றீர்?

அரு: ஆமையா.........ஆம். அதுமட்டுமல்ல, எல்லாப் புராணங்களுமே புளுகு நிறைந்தவைகள்தாம்! அவைகள் தீக்கிரையாக்கப்பட்டாலொழிய திருந்தாது நாடு! உமக்கு, உள்ள உரமிருந்தால் என்னுடன் வாதம் செய்து உமது கூற்றை மெய்ப்பித்து விடும் பார்க்கலாம். ஏனய்யா, சைவத்தின் உயர்வையும் சிறப்பையும் எடுத்துக் காட்ட எண்ணற்ற ஏடுகள் இருந்தும் மக்கள் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் ஏன், தத்தமக்குத் தோன்றியவாறெல்லாம் நடக்கத் தலைப்பட்டுவிட்டனர்? புராணங்களில் குறிப்பிட்டுள்ளதெல்லாம் மக்களை, மாக்களாக ஆக்குவன வென்று அறிந்து கொண்டதால்தானே அவர்கள் அவைகளை வெறுத்து ஒதுக்கும்படி நேரிட்டுவிட்டது! ஏனய்யா, மக்களிடம் கூறும்போது, அவர்கள் அதைச் சிறிதளவாவது நம்பும்படி கூறவாவது பழகிக்கொள்ளக்கூடாதா? ஓ......மறந்தே போனேன்........ அது உம்மீது குற்றமில்லைதான். ..........புளுகுப் புராணங்களைப் படித்துப் படித்து அவற்றிலேயே ஊறித் திளைத்துள்ள உமக்கு எங்கேஅந்த அறிவாற்றல் இருக்கப் போகின்றது? போமய்யா போம்.........வீணாக மக்களைக் குருட்டுப் பாதையில் அழைத்துச் செல்லவேண்டாம். உங்களுக்கு வயிறு வளர்க்க இது தானா வழி? ஏன், எங்கேயாவது சென்று உழைத்து உண்பது தானே! உமக்கென்ன கேடு?

சாஸ்: டேய் நாஸ்திகா நீ அழிஞ்சிபோககாலம் நெருங்கி விட்டது. "விநாசகாலே விபரீத புத்தி", என்பது போல என்னுடைய விஷயத்திலே நீ தலை

யிட்டுட்டே.. அதன் பலனை சீக்கிரம்மே அனுபவிப்பே......

[சாஸ்திரியார் கோபமாகப் போகிறார் — அருணன் சிரிக்கிறான்—பொதுமக்களும் சிரிக்கின்றனர். அருணன் போகிறான். பின்பு.........]

புது ஒளி: என்னடா வேதாந்தம், பார்த்தியா சாஸ்திரியார் பட்டபாட்டை!

வேதா; அண்ணே, சாஸ்திரியார் சாபம் சும்மா விடாது. நீ வேணுமின்னு பாரேன்...!

புதுஒளி: சும்மா விடாமே, என்னடா பண்ணிடும்? உன்னை போல உள்ள தொடை நடுங்கிகளாலே தமிழ் மரபுக்கே நீங்காத அவமானம்! நீங்களெல்லாம் அவமான சின்னங்கள்....!

வை: டேய் புது ஒளி, இப்படி படபடன்னு கொள்ளு பொறிரூப்போல பேசிடாதேடா. ஏண்டா, அவுங்கள்ளாம், ஆண்டவன் அம்சமாச்சே அவுங்களை நாம், திட்டினு நரகம் தானேடா கிடைக்கும்?

பு: ஒ: போடா.....போடா .......பொழைக்கத் தெரியாதவனே, ஏண்டா இவனுங்க எல்லாம் ஆண்டவனுக்கு பிரதிநிதிகளா?

வேதா:—சந்தேகமில்லாம,.. ...........!

பு. ஒ: (முகத்தை சுளித்து கேலியாக) சந்தேகமில்லாம..... வாயை பாரு, நல்லா வண்ணாஞ் சாலு மாதிரி.......! ஆண்டவனுக்கு பிரதிநிதியா இருக்க யோக்யதை உடையவன் இல்லாததையும், பொல்லாததையும் புளுகி நம்மண்டை ஏண்டா பிச்சை எடுக்கணும்? உங்களை போலொத்த மண்பொம்மைங்க இருக்கிறவரைக்கும் நாடு உருப்படுமின்னு நான் நினைக்கலே....!

வே: டேய் வைதீகம், வாடா போவோம், நமக்கேண்டா வம்பு........!

வை: ஆமாம்.....ஆமாம் நீ சொல்வதும் சரிதான்!

[மூவரும் போகின்றனர்]

## அங்கம் 2

**இடம்:** அரண்மனை மண்டபம்

**காலம்:** காலை.

[முல்லைநாட்டு மன்னன் முகில்வண்ணன், அரசி அஞ்சனா தேவி, இளவரசி காஞ்சனா, இராஜகுருவின் மகள் திலோத்தமா, இராஜகுரு ஆலவாயர், மந்திரி மணி வேலர், மற்றுமுள்ள பிரதானிகள், சேனை வீரர்கள் தம் தமது அந்தஸ்துக் கேற்றபடி ஆசனங்களில் அமர்ந்திருக்கின்றனர். நடனம் நடக்கின்றது. நடனம் முடியும் தருவாயில் மந்திரி மணிவேலர் அரசனிடம் இரகசியமாக பரிசுகளை இராஜகுருவின் கரங்களினால் பரிசளிக்கும்படி செய்வது நல்லதென உரைக்கின்றார். அதற்கு அரசனும் தம் சம்மதியை அறிவிக்கும் பொருட்டு......]

முகில்: ஆம், ஆம் நீர் சொல்வதும் சரிதான்! அப்படியே செய்து விடுவோம்!

ஆல: ஏ, ராஜன் என்ன அது?

முகில்: குருதேவா, தங்களின் திருக்கரங்களிலேயே அவர்களுக்குப் பரிசளிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஆல: (அசட்டுசிரிப்பு) ஹூம் .......ம்...ம...ம்! சந்தோஷம்!

[ஒருவன் பரிசுத்தட்டை ஆலவாயர் முன்பு நீட்ட அவர் அவைகளை அலட்சியமாக தனது இடது கையால் ஆசீர்வதித்து அவைகளை நடனப் பெண்டிருக்குத் தரும்படி சைகை செய்கிறார். பரிசுகள் தந்த பின்பு..... ]

ஆல: லோகமாதாவின் அவதாரங்களே, சக்திகளே! மங்களானி பவந்து! மங்களானி பவந்து! ஆஹா.......ஹா...... ஹா......இன்று உங்களது நடனம் அற்புதம்....அபாரம்....... ஆனந்தம்! புனிதமான ஆதிரை நக்ஷத்திர நாளாகிய ஆருத்ராவின்போது எல்லாம் வல்ல எம் பெருமான் ஸ்ரீ கைலாசநாதரும், ஸ்ரீ பார்வதி தேவியாரும் பதஞ்சலி, வேதவியாக்கியர் முதலான பக்த கோடிகளின் வேண்டுகோளுக்கிணங்கி அன்று காலைத் தூக்கி நின்றாடிய ஆனந்த—அற்புதத் தாண்டவம்போல் இருந்தது உங்களது இன்றைய நடனம். நீங்கள் வாழ்க! உங்கள் கலை வளர்க!

[சிரித்துக்கொண்டே அமர்தல்—பத்துப்பதினைந்து பிராமணர்கள் தலைவிரி கோலமாய் ஓடி வருகின்றனர். ஆலவாயரும் அரசன் முதலானோரும் திடுக்கிடுகின்றனர்.]

முகில்: என்ன.,..என்ன.. ...பிராமணோத்தமர்களே, என்ன பதட்டம்?

1 பிரா: ஏ ராஜன்! இதோ பாரும், ஓர் நாஸ்திகப்பதர் இழைத்த கொடுமைகளை!

முகில்: யாரவன்? இனித்தகைய கொடுமைகளைச் செய் தான்?

2 பிரா: ராஜன்! அவன் பெயர் அருணனென்பது.

சம்பத்து சாஸ்திரி: நான் பெரியபுராணப் பிரசங்கம் செய்துகொண்டிருக்கும்போது அந்த அற்பப்பதர் என்னையும், இந்த பிராமணோத்தமர்களையும், பிரசங்கம் செய்யமுடியாதபடி கலவரம் விளைவித்தான். அதைத் தடுக்கப் போய் நாங்கள் அந்த முரடனால் இந்தக் கதிக்காளானோம்.

ஆல: அனியாயம் — அக்கிரம பாவமான செய்கை—மன்னிக்க முடியாத மகத்தான குற்றம்!

முகில்:—குருவே, பொறுங்கள்.........பொறுங்கள் ஹூம் இது எப்போது நடந்தது?

சம். சாஸ்: நேற்றிரவு நடந்தது. நாங்கள் உங்களை அப்போதே பார்க்க முடியாமல் போய்விட்டதால், அரண்மனை வாயிலிலேயே இன்று காலை சபை கூடும்வரை காத்திருந்தோம். ராஜன், நீ மட்டும் அந்த அதமனை தண்டிக்காவிட்டால் இந்தப் பிராமணர்களின் சாபம் உன்னைச் சும்மா விடாது!

ஆல: ஆம் சும்மாவிடாது சாபம்! உத்தமர்களாம் இந்

(19-ம் பக்கம் பார்க்க)

# பாடம் புகட்டும் பத்தாயிரம்!

தேசாபிமானி—மலையாள நாட்டிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த ஒரு மலையாள மொழி இதழ்.

"பொதுவுடமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம் — புனிதமோடதை நமது உயிரென்று காப்போம்"—இதுதான் அந்த மலையாள ஏட்டின் இலட்சியகீதம்.

முதலாளித்துவ முதலைகளின் வெறியாட்டங்களைச் சாடுவது; பழமைப் பித்தர்களின் சித்தத்திற்குச் சவுக்கடி வீசுவது; ஆட்சியாளர்களின் அலங்கோலப் போக்கை அக்கு வேறு ஆணி வேராக எடுத்துக் காட்டுவது; உழைப்பவர் உலகின் உள்ளக் குமுறலை உணர்ச்சி மிக்க எழுத்துக்களால் உருவாக்கிக் காட்டுவது.

—இவைதாம், 'தேசாபிமானி'யின் தினசரித் தொண்டுகள்.

இத்தகு பணிகளில் தவறேதும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. நமக்குமட்டுமா? ஜனநாயகக் கோட்பாட்டில் தளராத நம்பிக்கை உடைய யாருக்குமே தான் தெரியாது.

ஆனால், அதிசயப் போக்கும் அற்புத சித்தமும் உடைய சென்னை ஆட்சியாளர்களின் கண்களுக்கு, இந்தப் பணிகள், மன்னிக்க முடியாத மாபெரும் தவறுகளாகத் தோற்றமளித்துவிட்டன.

உடனே, "ஈடு ரூபா பத்தாயிரம் ஜாமீன்" என்று வீரகர்ஜனைபுரிந்தனர்—"இல்லையேல் நிறுத்திவிடு இதழை! நிறுத்திவிடு நிறுத்திவிடு!" என்று இடி முழக்கம் புரிந்தனர்.

பத்தாயிரம் ஜாமீன் கட்டப்பட்டது.

சில நாட்கள் சென்றன.

கட்டப்பட்ட ரூபா பத்தாயிரம் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டது என்று அமைதியாக—ஆனால் அழுத்தம் திருத்தமாக, "தேசாபிமானி" அலுவலகத்திற்குத் தகவல் தெரிவிக்கலாயினர் சென்னை ஆட்சியாளர்கள்.

திகைத்துவிட்டனர் தேசாபிமானி அலுவலகத்தார்!

"பத்து ஆயிரங்கள்! அவ்வளவும் பறிமுதல்!" என்றால் யார் தான் திகைக்கமாட்டார்கள்?

திகைத்தனர் சிறிதுநேரம் — திகைப்பு தீர்ந்ததும், "செல்வோம் நீதிமன்றம், கேட்போம் இது முறைடா என்று!" என்ற எண்ணம் பிறந்தது — சென்றனர் சென்னை உயர் நீதிமன்றம்.

"மலபார் போலீசைக் குறித்து மனம்போன போக்கில் தாக்கியிருக்கிறது 'தேசாபிமானி' — எனவேதான் பறிமுதலாகிவிட்டது பத்தாயிரமும்!" என்று வாதாடினர் சென்னை சர்க்கார்.

"மனம்போன போக்கில் யாம் ஏதும் எழுதிடவில்லை. மலபார் போலீசார் மக்கள் மன்றத்தில் நிகழ்த்திய அட்டூழியங்களைத்தான் அடுக்கடுக்காக எழுதியுள்ளோம். ஆதாரம் உண்டு அத்தனை எழுத்துக்கட்கும்" என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொண்டனர் "தேசாபிமானி" இதழாசிரியர்கள்.

நீதிபதிகள் மூவர்: ஜஸ்டிஸ் இராஜமன்னார், ஜஸ்டிஸ் சத்ய நாராயணராவ், ஜஸ்டிஸ் விஸ்வநாத சாஸ்திரி.

மூவரும் ஒரே மனதாகத் தீர்ப்பளித்தனர்—நல்ல தீர்ப்பு! நல்லறிவாளர்கள் எவரும் நிச்சயம் பாராட்டித் தீரவேண்டிய தீர்ப்பு!

"பறிமுதல் உத்தரவு செல்லாது" — இதுதான் நீதிபதிகள் அளித்த தீர்ப்பின் சுருக்கம்.

"மலபார் போலீசார் நிகழ்த்தியதாகச் சொல்லப்படும் சில கொடுமைகளை விளக்கமாக எடுத்துக்காட்டி, அவர்களின் இத்தகாச் செயல் குறித்து ஒரு பகிரங்க விசாரணை நடத்த வேண்டும் என்றுதான் 'தேசாபிமானி' இதழில் தீட்டப்பட்டிருக்கிறது. இப்படிக் கேட்பது ஒருபோதும் குற்றமாகாது.

"பத்திரிகையில் கையாளப்பட்டிருக்கும் நடை மிகவும் கடுமையானதாக இருக்கிறது என்பது உண்மை, ஆனால் ஓர் அந்நிய ஆட்சி இருக்கிறபோது ஆட்சியாளர்களை எதிர்த்து எழுதப்படும் மிகச் சாதாரண வார்த்தைகளும்கூட குற்றமுடையனவாகக் கருதப்படுவதைப்போல, சுதந்தர ஆட்சி ஏற்பட்டுவிட்ட இன்றைய நிலையில் கருதப்படத் தேவையில்லை.

"ஆட்சியாளர்களின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் கண்டித்து எழுதப்படும் கட்டுரைகள் சட்டப்படி குற்றமுடையனவா அல்லவா என்பதை நிலைநாட்ட வேண்டிய நேரங்களில் எல்லாம்; 1947 ஆகஸ்டு 15-க்குப் பிறகு ஏற்பட்டிருப்பது சுதந்தர சர்க்கார் —எனவே, முன் இருந்ததைவிட சற்று தாராளமான முறையிலேயே பத்திரிகாசுதந்தரம் என்ற சொற்றொடருக்குப் பொருள் கொள்ளவேண்டும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது."

என்று நீதிபதிகள் மூவரும் தெள்ளத் தெளிய எடுத்து விளக்கி, பேச்சுரிமை எழுத்துரிமை ஆகியவற்றின் சிறப்பையும் செல்வாக்கையும் நன்கு நிலைநாட்டியிருக்கின்றனர். மேலும் அவர்கள் தொடர்ந்து தம் தீர்ப்புரையைத் தீட்டுகையில்,

"பத்தாயிரம் ரூபா ஜாமீனைப் பறிமுதல் செய்வது இந்நிலையில், எழுத்துரிமையைப் பறிப்பதாகவே முடியும் என்று நாங்கள் அஞ்சுகிறோம். எனவே ஆட்சியாளர்களின் பறிமுதல் உத்தரவு செல்லாது என்று நாங்கள் தீர்ப்பளிக்கிறோம்."

என்று அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறனர்.

தேசாபிமானி வழக்கு—எழுத்துரிமைக்குக் கிடைத்துள்ள ஒரு மகத்தான வெற்றி!

அதே நேரத்தில்,

அவ் வழக்கு,

ஆட்சியாளர்கட்கு நேரிட்டுள்ள மறக்க முடியாத ஒரு தோல்வி!

**"எழுத்துரிமையைப் பறிக்காதே! ஜனநாயகத்திற்கு உலை வைக்காதே!"** என்னும் அருமையான பாடத்தை ஆட்சியாளர்கட்குப் புகட்டியிருக்கிறது "தேசாபிமானி" தொடுத்த பத்தாயிரம் ரூபா ஜாமீன் வழக்கு!

பத்தாயிரம் புகட்டியிருக்கும் பாடம்—அதை மறவாமலிருந்தால் ஆட்சியாளர்கள், அவர்கட்கு 'நல்ல காலம்'!

இல்லையேல்........?

விடை நாம் கூறத்தேவையில்லை, உலக வரலாறு கூறும்.

# போர்வாள்

[ திராவிடர் வார வெளியீடு ]

| வாள் | திருவள்ளுவர் ஆண்டு 1981 மார்கழி 1 | வீச்சு |
|---|---|---|
| 4 | 16—12—50 சனிக்கிழமை | 16 |


## அடக்குமுறைப் பட்டியல் வளர்கிறது!

* "போர்வாள்" நாடகத்துக்குத் தடை

* "இராவண காவியம்" கவிதை ஏடு பறிமுதல்

* "சர்வாதிகாரி" நாடகத்துக்குத் தடை

* "மகாத்மாவின் தொண்டன்" நாடகத்திற்கு 144.

* "தூக்குமேடை" நாடகத்திற்குத் தடை.

* "இரணியன் அல்லது இணையற்ற வீரன்"—அதை நடிக்காதே என்ற உத்தரவு.

* குயில் கவிதை இதழ்—அதை வெளியிடாதே எனத் தாக்கீது.

* விடுதலை தினசரிமீது 2000 ரூ ஜாமீன் பாணம்.

* 'கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா'—நூலாசிரியர் மீது வழக்கு; வெளியிட்ட அச்சகத்தின் மீது 3000 ரூ ஜாமீன் பிரயோகம்.

* 'உடுமலை பீரங்கி'—பத்திரிகாசிரியர் மீது வழக்கு.

* 'கிளர்ச்சி'—வார வெளியீட்டின் மீது 153 ஏ பாய்ச்சல்—500 ரூ. அபராதம்.

* 'சவுக்கடி'—நூலாசிரியர்கள்மீது மூன்று முறை வழக்கு.

* 'அறப்போர்'—அண்ணாவின் நூலுக்குத் தடை.

* 'இலட்சிய வரலாறு'—புத்தகத்தை விற்காதே என்ற கட்டளை; இயற்றியதற்காக அண்ணாவின் மீதும், வெளியிட்டதற்காக 'திராவிடப் பண்ணை' யார்மீதும் 153 ஏ பாணம்.

* 'காந்தியார் சாந்தியடைய'—நூலாசிரியர் தோழர் ஆசைத்தம்பிக்கு 6 மாத கடுங்காவல். வெளியீட்டாளருக்கு 3 மாத கடுங்காவல்.

* 'ஆரியபட்டுமே திராவிடம்'—புத்தக வெளியீட்டாளருக்கு 3 மாத சிறை வாழ்வு

* 'திராவிடர் நிலை'—புத்தகத்தை அச்சிட்ட பெருங்குற்றத்திற்காக அச்சக உரிமையாளர்மீது 1000 ரூ. ஜாமீன் அம்பு

* 'விடுதலை' ஜாமீன் ரூ. 2000 பறிமுதல்.

* 'விடுதலைக்குப் புது ஜாமீன் ரூ. 10 000.

* 'திராவிடநாடு' வார இதழுக்கு ரூ 3000 ஜாமீன்.

* 'விடுதலைப் போர்'—அண்ணாவின் அரிய புத்தகம்—விற்கக்கூடாது.

* 'பொன்மொழிகள்—பெரியாரின் கருத்துரைக் கொத்து—இயற்றியதற்காக பெரியாருக்கு 6 மாத சிறைத் தண்டனை.

* 'ஆரிய மாயை'—வரலாற்றுத் தொகுப்பு நூல்—தீட்டியதற்காக அண்ணாவுக்கு '6 மாதம்'.

* கோட்சேக் கூட்டம்—தோழர் பிச்சமூர்த்தியின் நூல்—இயற்றியதற்காக ஆசிரியர் மீது வழக்கு.

* வெளியிட்டதற்காக, அச்சகத்தார்மீது 1000 ரூ. ஜாமீன் பாய்ச்சல்.

* சீர்காழி, அதிராம்பட்டினம், குன்றத்தூர், திருவாரூர், தஞ்சாவூர், நாரணமங்கலம் மற்றும் பல இடங்களில் பொதுக் கூட்டத்திற்கு 144.

* 'திராவிடநாடு' தினசரிக்கு ரூ. 1000 ஜாமீன் 'பரிசளிப்பு'.

* சென்னையில் ஆச்சாரியார் வருகையின்போது, கருங்கொடி காட்ட முயன்ற பல்லாயிரவர் மீது பலமான தடியடி. ஆயிரப் பேருக்குப் படுகாயம். 60 பேர் கைது. 34 பேருக்குச் சிறை.

* குன்றத்தூரில் 'எட்டு ரவுண்டு' துப்பாக்கிப் பிரயோகம்—48 மணிநேர ஊரடங்கு சட்டம்—பலமான தடியடி தர்பார்—27 பேர் கைது—என். வி நடராசனுக்குச் சிறைவாசம்.

* சென்னையில் 'ஆரிய மாயை' விற்ற தோழர்கட்குக் காராகிருக வாசம்.

* சென்னையில் வடநாட்டு சுரண்டல் எதிர்ப்பு மறியல் தொண்டர்கட்கு ஒரு வாரம் முதல் மூன்று மாதம் வரை கடுங்காவல் தண்டனை.

வேகவேகமாக வளர்ந்து வரும் திராவிட இயக்கத்தின் மீது அதன் வளர்ச்சியையும் எழுச்சியையும் கண்டு உள்ளம் பொறாத ஊராட்சியாளர்கள் அடுக்கடுக்காக எடுத்து வீசியிருக்கும் அடக்குமுறை அணைகட்டிகளின் பட்டியல் இது.

* நாடகங்களுக்குத் தடை

* பொதுக்கூட்டங்களுக்குத் தடை.

* புத்தகங்களுக்குத் தடை.

* பத்திரிகைகளுக்கு ஜாமீன்.

* நூலாசிரியர்கள் மீது வழக்கு

* அச்சகத்தார்கட்கு ஜாமீன்

* பதிப்பாளர்கட்கு ஜாமீன்.

* துப்பாக்கி—தடியடி பிரயோகம்.

* தொட்டதற் கெல்லாம் கடுங்காவல் தண்டனை.

இப்படி, பலப்பல வடிவங்களில்தோன்றி, பற்பல விதமாகத் தன் தணியாத பெரும் பசியைத் தீர்த்துக்கொள்ள முயன்றிருக்கிறது ஆட்சியாளர்களின் அடக்குமுறைஆவேசம்.

என்றாலும், பசி, இன்னமும் தீர்ந்தபாடில்லை.

இவ்வளவு ஏராளமான 'உணவை' உட்கொண்டுங் கூட, பசி, நித்த நித்தம் வளர்ந்தபடி இருக்கிறதே தவிர, சிறிதளவும் குறைந்திருக்கிறது என்று கூறும் நிலையில இல்லை.

நாள்தோறும், காலையில், தினத்தாள்களைப் பிரித்துப் பார்த்ததும், ஒவ்வொருபக்கத்திலும், ஆட்சியாளர்களின் அடக்குமுறைப் பசிக்கு ஒவ்வொரு புதுப 'பலி' இருந்தவண்ணம் தான் இருக்கிறது.

இந்த ஊரில 144! அந்த நாடகத்திற்குத் தடை உத்தரவு! இந்தப் புத்தகம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது! அந்தப் பத்திரிகைமீது 153 வழக்கு—என்னும் இப்படிப்பட்ட 'மங்களகரமான' சேதிகள் நம் செவிகளை வந்து தாக்காத நாளே கிடையாது.

இங்கே தரப்பட்டிருக்கிற அடக்குமுறைப் பட்டியலின் நீளம், ஒரு சர்வாதிகார ஆட்சியின் எதேச்சாதிகாரப் பசியைக் கூட முற்றிலும் தணிக்க வல்ல அளவுக்கு மிக நீண்டு நிற்கிறது.

ஆனால் தங்களை 'சர்வாதிகார சர்தார்கள்' என்றுசித்தரித்தால் சீற்றம் மிகக்கொள்ளும் சென்னை ஆட்சியாளர்களின் அடக்குமுறைப் பசியோ, மலையெனக் குவிந்திருக்கும் இவ்வளவு உணவையும் கண்டு, திருப்தி, துளியளவும் அடையாமல், மேலும் மேலும் உணவு வந்தாகவேண்டுமென்று கொக்கரிக்கிறது.

நாரணமங்கலம்—திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சிற்றூர். அங்கே, 144 உத்தரவை உருவாக்கினர் ஊராள வந்திருக்கும் உத்தமர்கள். காரணம்? அடக்குமுறைப் பசிதான்!

நாரணமங்கலம்- அமைதியின் சின்னம்! கலவர உணர்ச்சி கடுகளவும் அற்ற ஊர்! என்றாலும், அங்கே 144!

பேச்சுரிமை—ஜனநாயக உரிமைகளில் தலையாயது; மிக மிக இன்றியமையாதது—ஆனாலும், அதற்குத் தடை உத்தரவு.

சென்னை ஆட்சியாளர்கள்—மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் ஆட்சியினர் என்று தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வதில் பூரிப்பும் பெருமையும் மட்டற்ற மகிழ்ச்சியும் கொள்பவர்கள். என்றாலும், அவர்கள்தான், 144 உத்தரவைப் பிறப்பித்து, பேச்சுரிமைக்குத் தடை விதித்திருப்பவர்கள்.

அஞ்சா நெஞ்சு படைத்த அடலேறுகள் எழுவர்—வானமாமலை, செண்பகராசன், விசயகோபால், ஆதிமூலம், வடிவேலு மருதமுத்து, அமராவதி என்னும் பெயர்கள் வாய்ந்தவர்கள்—திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் பகுத்தறிவுப் பாசறையின் முன்னணி வீரர்கள்—அவர்கள், நாரண மங்கலத்தைக் கண்டனர், அங்கே 144 'ஆனந்த' நடனம் புரிவதையும் கண்டனர். 144 உத்தரவால் பேச்சுரிமை பறிபோவதைக் கண்டனர். பேச்சுரிமை பறிபோவதால் ஜனநாயகக் கோட்பாட்டிற்குப் பேராபத்து விளைவதையும் கண்டனர்.

கண்டனர்—கண்ட பிறகு வாளா கிடப்பது வீரர் பண்பல்லவே—எனவே போர்க்களம் புகுந்தனர்—அறப்போர் புரிந்தனர்—144 ஐ மீறினர்—மூன்று மாத கடுங்காவல் பெற்றனர்.

மூன்றுமாத கடுங்காவல்—நினைக்கும்போதே நம் நெஞ்சு பதறுகிறது. ஆனால் அந்த அறப்போர் அண்ணல்களோ, 'இலட்சியவாதிகட்கு இத் தண்டனை வெறும் நிலாச்சோறு' என்று இன்மொழி புகன்றவண்ணம் புன்னகை புரிந்தனர்—சிறைக்கோட்டம் புகுந்தனர்.

மூன்று மாதங்கள்! தொண்ணூறு நாட்கள்! இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால்!-கொடிது கொடிது மிகக் கொடிது இத் தண்டனை என்றாலும், பெறுமின், பெறுமின், தண்டனையைப்

"சோமநாதபுர வீழ்ச்சி" என்னும் சுவைமிக்க நாடகத்தை 'போர்வாள்' வாசகர்கட்களித்த நண்பர் கு தனபாலன் தீட்டியுள்ள புதிய இனிய நாடகம், 'திலோத்தமா.' நாடகத்தின் முதல் மூன்று காட்சிகள் இந்த இதழில் தரப்பட்டுள்ளன. ஏனைய காட்சிகள் அடுத்த வாரம் முதல் தொடர்ச்சியாக வெளியிடப்படும்.

பெறுமின் என்று கூறிய வண்ணம், மாவீரர்கள் எழுவரையும் சிறைச்சாலைக்குள் தள்ளிக் கதவைச் சாத்தித் தாளிட்டுவிட்டனர் சென்னை ஆளவந்தார்கள்.

நாரணமங்கலம், சென்னை ஆட்சியாளர்களின் அடக்குமுறைப் பசிக்கான மற்றொரு பலிபீடமாகிவிட்டது.

பசி, நாரணமங்கலத்தைக் கண்ட பிறகாவது, சிறிதாவது, தணிந்ததா?

இல்லை!

சென்னையில், 'திராவிடநாடு' தினசரி அலுவலகத்தில் ஓராயிரம் ரூபாய்க்குமேல் பெறுமானம் உள்ள காகித பேல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஆளவந்தார்களின் 'பசி', அந்தக் காகிதக் கட்டுகள்மீது திரும்பியது. காகிதம், கடும்பசிக்குப் பலியாயிற்று. ஆட்சியாளர்கள் காகித பேல்களைப் பறிமுதல் செய்து எடுத்துக்கொண்டு போய்விட்டனர்.

இவ் விபரீதச் செயல் புரிந்ததற்குக் காரணம் என்னவாம் தெரியுமா?

ஆரியமாயை வழக்கிலே அறிஞர் அண்ணாதுரைக்கு எழுநூறு ரூபா அபராதம் அல்லது ஆறுமாத சிறைவாழ்வுத் தண்டனை விதிக்கப்பட்டதல்லவா, அப்போது அண்ணா அவர்கள் ஆறுமாதத் தண்டனையையே ஏற்கிறேன் — எழுநூறு ரூபா அபராதம் கட்டமாட்டேன் என்றுகூறி புன்முறுவல் பூத்த முகத்துடனே புகுந்தனரல்லவா சிறைக்கோட்டம், அப்படிச் செய்தது தவறாம்! சிறைக்கோட்டம் புகுந்திருக்கக் கூடாதாம் அவர்! எழுநூறு ரூபாய் அபராதத்தைத்தான் கட்டியிருக்கவேண்டுமாம்! அப்படிக் கட்டாமல் அவர் சிறைக்கோட்டம் புகுந்தது, ஆட்சியாளரை ஏமாற்றுவதற்காகச் செய்யப்பட்ட தந்திரமாம்! எனவேதான் அவரைச் சிறையிலிருந்து விடுதலைசெய்துவிட்டு, அபராதத் தொகையை வசூலிக்க காகித பேல்களைக் கொண்டு சென்றிருக்கின்றனராம் ஆட்சியாளர்கள்!

கூறுகிறார்கள் கூர்த்தமதிபடைத்த ஆளவந்தார்கள் இதுபோல!

"எழுநூறு ரூபா அபராதம் அல்லது ஆறுமாத தண்டனை"— இதுதானே தீர்ப்பு — இந்தத் தீர்ப்பின்படி, விருப்பமிருந்தால் எழுநூறு ரூபாயைக் கட்டலாம் அபராதமாக—இல்லையானால் சிறைக்கோட்டம் செல்லலாம் ஏழுமாத காலம் என்பதுதானே பொருளாகப் பெறப்படுகிறது!—எனவே ஆறுமாத சிறைத்தண்டனையை ஏற்றவுடன் எழுநூறு ரூபா அபராதம் என்ற பகுதி அடிபட்டுப் போகிறதே—இந்நிலையில் அபராதத்தை வசூலிப்பது எப்படி நியாயமாகும் என்று நீங்கள் கேட்கக்கூடும். நீங்கள் கேட்பதைப் பற்றி ஆட்சியாளர்களுக்கு என்ன கவலை? அவர்கள்தான் மக்களை மதியா மகானுபாவர்களாக மாறிவிட்டார்களே!

அடக்குமுறைப் பசி, காகித பேல்களைப் புசித்தபிறகாவது தணிந்திருக்கலாம் அல்லவா? ஆனால் தணியவில்லை! காகித பேல்களைப் புசித்துக்கொண்டே, பசி, நடிகவேள் இராதாவின் 'நல்லமுடிவு' நாடகத்தின் மீது பாய்ந்து, அதற்கு 144 தடை உத்தரவை ஆநந்தத்துடன் விதித்து விட்டது.

* நாரணமங்கலம் அறப்போர் வீரர்கட்கு மூன்று மாத கடுங்காவல்.

* அறிஞர் அண்ணாதுரையின் சார்பில் வாங்கி வைக்கப்பட்டிருந்த ஆயிரம் ரூபா பெறுமானமுள்ள காகித பேல்கள் ஜப்தி.

* பெரியார் ஈ. வெ. ராவின் மோட்டார்கார் பறிமுதல்.

* நடிகவேள் ராதாவின் "நல்லமுடிவு"க்குத் தடை.

சென்ற ஒரு வார காலத்தில், ஆட்சியாளர்களின் அடக்குமுறை ஈட்டி பாய்ந்துள்ள நான்கு திசைகள் இவை.

பசி, இந்த அளவோடாவது நிற்குமா? இன்னமும் வளருமா?

இந்த அளவோடு நின்றால் நல்லது. நிற்காமல் வளருமானால்.........

வளருமானால் என்ன ஆகும்?.......................

அதோ, முன்னாளில் வாழ்ந்து இன்று வீழ்ந்துகிடக்கும் சியாங்—கே—ஷேக்!.........

அவரைக் கேளுங்கள்.........

அருமையானவிடைகூறுவார்


# நாஞ்சில் மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு

கிருஷ்ணன் கோவில் தியாகராயர் பந்தலில்! டிசம்பர் 29, 30 வெள்ளி, சனியில்!

பொதுச் செயலாளர் அண்ணாவும், கழகப் பேச்சாளர்கள் பலரும் பங்குபெறுவர்

தலைவர்: இரெ. இளம்வழுதி திறப்பாளர்: என். எஸ். இளங்கோ

# ஆளும் கட்சி—அங்கும்! இங்கும்!!

ஆற்றங்கரையிலே இருக்கும் மடு—மேடு—இவைபோன்றவை தான், ஒருநாட்டிலேதவழும்மந்திரிகட்சி, எதிர்க்கட்சிஎன்பவை.

ஆற்றிலே, திடீரென்று வெள்ளம் கரைபுரண்டோடிவரும். அப்போது, ஆற்றங்கரையிலே இருக்கும் மடு, பக்கத்தே இருக்கும் மணலால் நிரப்பப்பட்டு மேடாக மாறிவிடுவதுண்டு. அதுபோலவே, அதே நேரத்தில், மேடாக இருந்த பகுதி, வெள்ளத்தால்கரைக்கப்பட்டு, ஆழ்ந்த பள்ளமாக மாறு, மடு என்ற பெயரைப் பெற்றுவிடுவதுண்டு.

ஒரு நாட்டின் அரசியல் வாழ்வு என்னும் ஆற்றிலேயும், இதுபோலத்தான், தேர்தல் வெள்ளம் கரைபுரண்டு வரும்போது, அதுவரை மந்திரிபீடத்தில் அமர்ந்து மண்டலமாண்ட கட்சி, தன் செல்வாக்கு சிதைந்து, மதிப்பு மங்கி, ஆற்றல் அருகி, எதிர்க்கட்சியாக உருமாறிவிடுவதும், அதே நேரத்தில், அதுநாள்வரை எதிர்க்கட்சியாக இருந்த இயக்கம், பாராட்டுதலும் பேராதரவும் பெருகி, மந்தரிக்கட்சியாக மாறி ஆட்சிப்பீடத்தில் அமர்வதும் இயற்கை.

மந்திரி கட்சி எதிர்க்கட்சியாவதும், எதிர்க்கட்சி மந்திரி கட்சியாவதும், எந்த ஜனநாயக நாட்டிலும் சர்வசாதாரணமாக நிகழும் நிகழ்ச்சிகள்.

இதனை நன்றாக உணர்ந்த காரணத்தால்தான் பிரிட்டன் முதலாகிய சிறந்த ஜனநாயக நாடுகளில், ஆளுங்கட்சியாக இருக்கும் வாயபபுப் பெற்றவர்கள், எதிர்க்கட்சி நாற்காலிகளில் அமர்ந்திருப்பவர்களை மிகுந்த கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்துவது வழக்கம்.

குறிப்பாக, பிரிட்டிஷ் தீவுகளில், முதலமைச்சருக்கு அடுத்தபடியாக உயர்தர மரியாதை பெறுபவர், துணைமுதலமைச்சரோ நிதி அமைச்சரோ சட்ட அமைச்சரோ அல்லர்—சட்டசபையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்தான்!

நாட்டையாளும் நல்வாய்ப்புப் பெற்றுள்ள முதலமைச்சருக்கு எப்படி மாத ஊதியம் தரப்படுகிறதோ, அப்படித்தான், பிரிட்டிஷ் தீவுகளில், எதிர்க்கட்சித் தலைவருக்கும் மாத ஊதியம் தரப்படுகிறது.

மிஸ்டர் அட்லி — பிரிட்டிஷ் பிரதமர்—எனவே அவர் சம்பளம் பெறுகிறார் மாதந்தோறும்! ஆனால் மிஸ்டர் சர்ச்சில்—மந்திரி அல்லர்—எதிர்க் கட்சித் தலைவர்—நாள்தோறும், பாராளுமன்றத்தில், ஆட்சியாளர்களைப் பலமாகத் தாக்குவதில் ஈடு இணையற்றவர்—என்றாலும், அவருக்கும் மாதந்தோறும் சம்பளம் தரப்படுகிறது அட்லி ஆட்சியாளரால்!

நவம்பர் மாதம் பதினோராம் தேதி, 'பாப்பி திருநாள்,' அதாவது, சென்ற இரண்டு உலகப் போர்களிலும் தம்மைப் பெற்றெடுத்த பொன்னாட்டின் சார்பாகப் போராடி வீரமரணமடைந்த பிரிட்டிஷ் போர்வீரர்களின் நினைவுநாள், பிரிட்டிஷ் தீவுகள் முழுதிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

அந்தத் திருநாளன்று, இலண்டனில் உள்ள போர் வீரர் நினைவு மண்டபத்தில், நடு இடத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவு மேடைமீது, மறைந்த மாவீரர்கட்கு வீர வணக்கம் செலுத்துவதன் அறிகுறியாக பாப்பி என்னும் ஒருவகை மலர்க்கொத்தை நிரப்புவது, மிக முக்கியமான ஒரு சடங்கு.

இந்தச் சடங்கு புரிவதில் முதல் உரிமை பிரிட்டிஷ் மன்னருக்குத் தரப்பட்டது! இரண்டாவது உரிமை, பிரதமர் அட்லிக்கு! மூன்றாவது உரிமை யாருக்குத் தெரியுமோ? துணைப் பிரதமர் மாரிசன் இருக்கிறாரே அவருக்கா — இல்லை! வெளிநாட்டமைச்சர் எர்னஸ்ட் பெவின் அவர்களுக்கா—கிடையாது! நிதி அமைச்சர் மிஸ்டர் கெயிட்ஸ்கில் என்பவருக்கா—இல்லை இல்லை! மந்திரி கட்சியினர் எவருக்கும் இல்லை அந்த உரிமை! வின்ஸ்டன் சர்ச்சில்—எதிர்க் கட்சித் தலைவர்— அவருக்குத்தான் அந்த உரிமை தரப்பட்டிருக்கிறது.

முதல் உரிமை—மன்னருக்கு! இரண்டாவது உரிமை—பிரதமருக்கு! மூன்றாவது உரிமை—எதிர்க்கட்சித் தலைவருக்கு!

ஆளுங்கட்சியினர், எதிர்க் கட்சியினருக்குக் காட்டும் மரியாதை, கண்ணியம், பெருந்தன்மை, இவ்வளவு சிறப்புடையதாகஇருக்கிறதுஇங்கிலாந்தில்!

ஆனால், இங்கோ?

இருக்கும் எதிர்க்கட்சித் தலைவர்கள் இருவர். ஒருவர், அறிஞர் அண்ணாதுரை. மற்றொருவர், பெரியார் இராமசாமி. இருவருக்கும் இந்த நாட்டு ஆட்சியாளர்கள் காட்டிய மரியாதை, கண்ணியம், பெருந்தன்மை—700 ரூபா அபராதம்! இல்லையேல ஆறுமாத சிறைவாசம்! அதுவும் இல்லையேல் சொத்து பறிமுதல்!

ஆளுங்கட்சி-இங்கிலாந்தில்அப்படி! இந்த இந்தியாவில்இப்படி!

இரண்டு நிலைமைகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள். பார்த்த பிறகு கூறுங்கள், இந்தியாவையும் ஜனநாயக நாடு என்று கூறுகிறார்களே ஒரு சிலர்—அது உண்மையா?

# காமராஜர்களே! காமராஜர்களே!!

காமராஜர்களே! காமராஜர்களே!

இப்படிக் கொஞ்சம் வாருங்கள்!

இதோ இங்கே சற்று அமருங்கள்!

ஒரே ஒரு சேதி—கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்கள்—பிறகு சென்று தாராளமாக திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்கும் தங்கள் திவ்யமான திருப்பணியைப் புரியுங்கள்.

தெற்கு தாழ்த்தப்படுகிறது—வடக்கு உயர்த்தப்படுகிறது என்றால், உங்களுக்குக் கோபம் வருகிறதல்லவா?

பட்டணமாகிறது டில்லி — பட்டிக்காடாகிறது சென்னை என்று நாங்கள் பேசினால் ஆத்திரம் உங்கள் உள்ளத்தை ஆட்டிப் படைக்க முற்பட்டுவிடுகிறதல்லவா?

தென்னாட்டை வாடவைத்து வடநாட்டை வாழவைக்கிறது டில்லி என்று நாங்கள் எத்தனைதரம்தான் கூறினாலும் உங்கள் சித்தம் அதனை ஏற்க மறுக்கிறதல்லவா?

இதோ பாருங்கள் காமராஜர்களே ஒரு முக்கியமான சேதி!

பங்கீட்டுக் கடைகள்மூலம் பொதுமக்களிடம் விநியோகிப்பதற்காக, அரிசி வாங்குகிறார்களல்லவா அகில இந்திய ஆட்சியாளர்கள், அப்படி வாங்கும்போது, வடநாட்டு அரிசியை எந்த விலைக்கு வாங்குகிறார்களோ அதே விலைக்குத்தானே தென்னாட்டு அரிசியையும் வாங்குவார்கள் என்று நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?

ஆனால், உண்மை என்ன தெரியுமோ?

சென்னை மாகாணத்து அரிசிக்கு டில்லி தேவதைகள் தரும் விலை ஒரு மணங்குக்கு ரூ. 8-4-3.

ஆனால் வங்கமாகாண அரிசிக்கு அவர்கள் தரும் விலை அதே மணங்குக்கு ரூ 1[illegible]-0-0

பம்பாய், பீகார் அரிசிக்குத் தரப்படும் விலை ரூ. 17-0-0.

உத்தரப் பிரதேச அரிசிக்கு உவந்தளிக்கும் தொகை ரூ. 24-0-0.

கவனமாகக் கேளுங்கள் காமராஜர்களே, தென்னாட்டு அரிசிக்குத் தரப்படும் தொகை ரூ. 8-4-3.

ஆனால் வடநாட்டு அரிசிக்கு அளிக்கப்படும் பணம் ரூ. 12 முதல் 24 வரை!

நீங்களே கூறுங்கள், நியாயமா இது? தெற்குக்கு ஒரு நீதி—வடக்குக்கு மற்றோர் நீதி—ஆகுமா இப்போக்கு?

இந்த விலை விவர வேறுபாட்டை எடுத்துக்கூறி உள்ளம் குமுறி இருப்பவர் சுயமரியாதைக்காரரல்லர்—கிருஷ்ணசாமி பாரதி—டில்லி சட்டசபையில் வீற்றிருக்கும் சென்னை காங்கிரஸ் பிரதிநிதி.

அரிசிக்கு அரிசி, தரம் அல்லது குணத்தில் ஏதாவது வேறுபாடு உண்டா, விலை வேறுபாடு நியாயம்தான் என்றுகூற? அப்படியுமில்லையாம்! ஏறத்தாழ ஒரே வகையான அரிசிதானாம்! தெளிவாகக் கூறியிருக்கிறார் தேசபக்தர் கிருஷ்ணசாமி பாரதியார்!

தென்னாட்டு அரிசிக்குத் தரப்படுவது 8 ரூபாய்!

வடநாட்டு அரிசிக்குத் தரப்படுவது 12 முதல் 24 ரூபாய்!

காமராஜர்களே! காமராஜர்களே! இப்போது கூறுங்கள்! வடநாட்டுச் சிறையிலிருந்து தென்னாட்டை விடுவிப்பதற்கான அறப்போர் புரிவதைவிட அதிமுக்கியமான வேலை நமக்கு வேறு இருக்க முடியுமா?

---

## திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழக (அமைப்பு)

## செயற்குழுக் கூட்டம்

தி. பெ. மு. க. துவக்க விழாவை முன்னிட்டு மேற்படி கமிட்டிக் கூட்டம் ஒன்று நாளது 17—12—50 ஞாயிறன்று பகல் 1 மணிக்கு சேப்பாக்கம் அருணசல ஆச்சாரி தெரு 13 எண் இல்லமாடியில் நடைபெற இருப்பதால், கமிட்டி உறுப்பினர் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு வந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அலமேலு
அமைப்பாளர்
தி. பெ. மு. க.

---

# செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு

பெரிய காஞ்சிபுரம் அரங்கசாமி பந்தலில்
டிசம்பர் 23, 24 சனி ஞாயிறுகளில்!

தலைவர் : சி. பி. சிற்றரசு. திறப்பாளர் : ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

பொதுச் செயலாளர் அண்ணாவும், கழகப் பேச்சாளர்கள் பலரும் பங்குகொள்வர்.

# ஆப்ரகாம் லிங்கன்கள், ஆயிரக்கணக்கில்!

(தில்லை க. அறிவழகன்)

"கேட்டீர்களா கதையை, நான் எத்தனை வருஷமாக என் பிள்ளையோடு சேர்ந்து வாழ்ந்தேன். தலைச்சன் மகன் தான், முஸ்லீமாகி, அப்பவே, அவளோடேயே குடித்தனம் போயிட்டாண்ணு, இவனும் கிளம்பிப் போகிறேன்கிறான், தன் பெண்டாட்டியோடே! மருமகள்ண்ணு இருந்தா மாமியாரிடம் அடங்கி ஒடுங்கித்தானே நடக்கணும், நான் அப்படி என்னங்க அவளைக் கொலையா பண்ணிவிட்டேன்."

"யாருங்க சேர்ந்திருக்க வேண்டாமிண்ணுங்க. காலையிலிருந்து நான் உழைக்கிறது, சமைக்கிறது, வீடுகூட்டுகிறது, எல்லாம் செய்கிறேன். செய்றது அத்தனையிலும் குத்தம் கண்டுபிடிச்சு கோழிமூட்டி எனக்கும், என் கணவனுக்கும் சண்டை மூட்டினா கோபம் வராதுங்களா? உழைக்கிறது ஒருத்தர். உட்கார்ந்து தின்கிறது ஒருத்தர்! கேட்டா வேதனையா இல்லீங்க? அப்படி என்னுங்க நான் பிறந்ததிலிருந்து அவங்களோடேயே வளர்ந்துட்டேன்! கல்யாணம் பண்ணின உடனேயே தனிக்குடித்தனம் போயிடலாமிண்ணு என் வீட்டுக்காரர் சொன்னாரு. நான்தான் கொஞ்ச நாளைக்கு சேர்ந்து இருந்து பார்ப்போம் என்றேன். இப்போ சேர்ந்து இருந்தது போதும், போதும்ண்ணு ஆயிட்டுதுங்க. நாங்க நாளைக்கே வேறபிரிஞ்சு போறங்க."

இந்த உரையாடல் நமது நாட்டின் எல்லாவீடுகளிலும் நடக்கும் சர்வசாதாரண மாமியார் மருமகள் தகராறு. தகராறு, சிறிய அளவினதாயின், வெறும்வார்த்தைகளில் நிற்பதும் பயமுறுத்தலோடு போய் விடுவதும், விஸ்வரூபம் எடுத்தால் பிரிவினையில் முடிவதும் பெரும் பிணக்கு நேர்வதும், இந்த நாட்டில் நடைபெறும் சர்வ சாதாரண நிகழ்ச்சிகளாகும்.

சர்வ சாதாரண நிகழ்ச்சிகள் தாமே என்று மறைத்து வைக்கப் போய், வைரத்தைப் பொடிசெய்து புசித்தும், ஊமத்தங்காயை அரைத்துத்தின்றும், விஷங்குடித்தும் தூக்கில் தொங்கியும், ஆற்றில் விழுந்தும், கடுநிசியில் எவரும் அறியாத நேரத்தில் ஓடியும், தண்டவாளங்களில் படுத்துத் தற்கொலை புரிந்து கொண்டும், பல'குடும்பவிளக்குகள்' அணைந்திருக்கின்றன! அணைகின்றன!

தாங்க முடியாத கொடுமைக்கு ஆளாகிற எவரும், எந்த நேரத்திலும் பிரிவது, நேர்மைக்கு விரோதமென்றோ ஒற்றுமைக்குப் பங்கம் என்றோ, எந்த நாட்டிலும் உண்மைக்கு ஊறுதேடாத எந்த அறிஞரும் இதுவரை மறுத்ததை நாம் கண்டதில்லை.

ஆனால் பரிதாபகரமான இந் நாட்டில் மறுக்கிறார்கள்!

* * *

"நாம் இருவரும் ஒற்றுமையாக இருப்போம்! பல நூற்றாண்டுகளாக ஒன்றாக இணைந்து வாழவில்லையா? இப்பொழுது ஏன் பிரிவினை? நாங்கள் உங்களுக்கு இருக்க இடம்தரவில்லையா? உண்ண சோறு போடவில்லையா?" என்று அமெரிக்க நாட்டு முதலாளிமார் கூறியபோது,

"அந்த அடிமை முறிச்சீட்டைத் தூள் தூளாக்குங்கள்.

எங்கள் உழைப்பால் நீங்கள் கோட்டீஸ்வரராகிறீர்கள். கோட்டை கொத்தளங்களென 'வீடு' பல கட்டிக் கொள்கிறீர்கள். இந்த உலகத்து இன்பம் அத்தனையையும் ஒரு சொட்டு விடாமல் சுவைத்து மகிழ்கிறீர்கள். ஆனால் உழைத்து உழைத்து உருக்குலையும் நாங்களோ ஓட்டைக் குடிசைக்குள் ஒடுங்கி, பதுங்கி சாகிறோம். எங்கள் குழந்தைகளோ கசங்கி நடுங்கிக் கடும்பிணிக்கு ஆளாகின்றன. எங்கள் மனைவிமார்களோ உடல் அழுகி மயங்கித் துடிதுடித்துத் தத்தளிக்கின்றனர். உண்ண உணவின்றி, ஒரு சிறிதும் உறக்கமின்றி, உயிர்பிழைத்திட ஒரு வழியின்றி, செத்த வாழ்வு' வாழ்கிறோம் நாங்கள். என்றாலுங்கூட நீங்கள், இரக்கமென்னும் ஓர் பொருளிலா அரக்கராக மாறி, செக்கு மாடென வாட்டி வதைக்கிறீர்கள் எங்களை! இத்தனைக் கொடுமையும் செய்கிறபோதா ஒற்றுமைப் பேச்சு! வேண்டாம் இந்த 'வெத்து வேதாந்தம்' என்று கூறி அடிமை விலங்கை உடைத்தனர், அவர்கள் கட்டுதிட்டங்களிலிருந்து பிரிந்தனர், அந்த நாட்டு நீக்ரோ அடிமைகள்.

"மத்திய ஆசியாவில் தோன்றிய மக்கட் கூட்டத்தார், ஐரோப்பாவில் பிரிட்டன் வரையில் பரவி, பாரசீகம் வழியாக இந்தியாவிலும் பரந்து வாழ்ந்தனர். ஆகவே நாமும் ஆங்கிலேயரும் ஒரு தாயின் மக்கள்' பரந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே நாமும் ஒரு பிரஜையாக இருப்பது நம் பாக்கியமே. கடந்த இரு நூறு ஆண்டாக, ஒன்றாக இணைந்து பழகி வாழ்ந்து, அவர்களது ஆங்கில மொழியையும் பயின்றிருக்கும் பெருமையுடையோம்" என்று கூறி, எந்த தேசியவாதியும் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்குத் தாம்பூலம் வைக்கவில்லை.

ஆகஸ்டுகள் பல தந்தனர்! ஆனாலும் அவர்களும் மறுக்கிறார்கள்.

எதை? யார்? ஏன்?

'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற உரிமை முழக்கத்தை, தேசியத்தோழர்கள், இந்தியாஒரே தேசம் என்ற காரணங்காட்டி, மறுக்கின்றனர்.

அரசியலில் டில்லிக்கும், பொருளாதாரத்தில் வடநாட்டு வாணிபத்திற்கும் நாம் அடிமைப் பட்டுக் கிடப்பதைப் புள்ளி விவரங்களோடு எடுதது விளக்கியும் கவனிக்க மறுக்கின்றனர்.

இந்தியாவைத் துண்டாடக் கூடாது, பலம் பொருந்திய மத்திய சர்க்கார் தேவை என்றெல்லாம் உரத்த குரலாலே உலகுக்கெல்லாம் எடுத்துக் கூறுகின்றனர்.

மாகாண சர்க்கார்கள், அரசியல் நிர்ணய சபை சட்டத்தால் வெறும் பஞ்சாயத்து போர்டுகளாகிவிட்டன. இவைகள் எதற்கெடுத்தாலும் மேலிடத்தின் அனுமதி பெற்றாக வேண்டிய வெட்கங்கெட்ட' நிலையில் உள்ளன என்பதை, பலமுறை, திராவிடரியக்கம் எடுத்து விளக்கிய பின்னும் கூட புரிந்து கொள்ள மறுக்கிறவர்கள் இந்நாட்டில் இன்னும் உள்ளனர் ஏராளமாக!

அவர்களுக்கு ஒரு செய்தி. சின்ன விஷயம்தான்! வாழ்க்கையின் முதல் தேவையான 'உணவு.' அதற்காக சென்னை மாகாண ஆளவந்தார்கள் படும் பாட்டை சொல்லி முடியாது. இதை காது கொடுத்துக்கேட்கச் சகிக்கவில்லை.'

மத்ய சர்க்கார், வடநாட்டு மாகாணங்கட்கு அதிக சலுகைகளையும், சென்னைக்கு ஒருவித அலட்சியத்தையுமே பரிசாகத் தந்திருப்பது பரிதாபம் மிக்க சென்னை மாகாணத்தார் உய்த்துணர வேண்டியவோர் உள்ளம் உருக்கும் செய்தி.

'பசி, பசி என்று திராவிடம் பதறித் துடித்துக் கொண்டிருந்த நேரத்தில் அதைப்பற்றி மத்திய சர்க்கார் மந்திரிகள் கவலைப்படாமல் நாடு சுற்றிக் கொண்டிருப்பதிலும், வனமகோற்சவம் நடத்துவதிலும் காலத்தைப் போக்கிக் கொண்டிருந்தனர். அதுமாத்திர மல்ல.

சென்னை மாகாணத்தில், இராமநாத புரத்திலும் கோவையிலும் பட்டினியினால் பரிதவித்து, கத்தாழையைத் தின்று, புளியங்கொட்டையைப் புசித்து, பலர் 'நவகாளி'யைவிட பயங்கரமான பூமியாக தங்கள் பாண்டிய நாட்டை-பிறந்தகத்தை—கருதி அதை விட்டுக் கிளம்பி, சென்னை, தஞ்சை, தென்னார்க்காடு மாவட்டங்களில் பிச்சையெடுத்து, வாழும் பரிதாபம் உருவாகிய பின்னும், காலராவுக்கும் மலேரியாவுக்கும் பலியாகி அவர்களிற் பலர் இறந்த பின்னும், சென்னை ஆளவந்தார்கள் காவடிகள் பல மத்திய அரசாங்கத்திற்கு எடுத்த பின்னும், தராத, இல்லாத உணவுப் பொருள், பம்பாய்க்கு தேவைக்குமேலே கிடைத்திருக்கிறது. விசித்திரம்! வேதனை!

அங்கே 'இராமநாதபுரம்' இல்லை. 'சேலம்' தோன்றவில்லை. பட்டினிப் பட்டாளம் வட்டமிடவும் இல்லை.

ஆனால் அங்கே உணவுப்பொருள் குவிந்திருக்கிறது தேவையான அளவுக்குமேல். யாரோ எங்கிருந்தோ அனுப்பிவிடவில்லை. எந்த மத்திய அரசாங்கம், சென்னை மாகாணத்தார் ஆறு அவுன்ஸூம் இன்றிச் சாகக்கிடந்த நேரத்தில் இல்லை என்று கைவிரித்துக் காட்டி இன்மொழி கூறியதோ அதே மத்திய அரசாங்கம்தான், அதன் கோட்டாவிற்கு மேல் அதிகப்படியான உணவை அளித்திருக்கிறது பம்பாய் மாகாணத்திற்கு, பம்பாய்க்கு மாத்திரமல்ல. இன்னும் சில வட இந்திய மாகாணங்கட்குக் கூட!

புதுடில்லியில் நவம்பர் 16-ம் தேதி பார்லிமென்ட் கூடியபோது தோழர். ஆர். கே. சித்வா பேசும்போது இச் செய்தியை வெளியிட்டார்.

"......சில மாகாணங்கள் தங்களுக்கு உள்ள தேவையைவிட அதிகப்படி தானியங்களை மத்ய சர்க்காரிடம் கேட்டு வாங்கி இருக்கின்றனர். பம்பாய் மாகாணத்தை இதற்கு உதாரணமாகக் கூற விரும்புகிறேன்......"

அவர் வெளியிட்ட அதே வார்த்தைகளை வெளியிட்டிருக்கிறோம்.

பலம் பொருந்திய மத்ய அரசாங்கம் என்றால் இதுதானா? பசிக்கிறவனின் கெஞ்சும் குரல் கேளாத முன்ஷி — பம்பாய்க்கும் மற்றும் சில மாகாணங்கட்கும் அதிகப்படியான உணவை எப்படி அனுப்பினார்? அனுப்ப அனுமதித்தார்?

இந்நிலையிலும் இங்கு பக்தவத்ஸலங்கள் பேசுகிறார்கள் 'பலமான மத்ய அரசாங்கம்' தேவை என்று! இவர்களுக்குக் கொஞ்சமாவது வெட்கம் இருக்க வேண்டாமா இந்த நிலையிலும் இப்படிப் பேசுகிறோமே என்று!

குமாரசாமி ராஜா, உணவு மந்திரி ரோச் விக்டோரியாவுடன், ஆலோசித்துப் பார்த்துச் செய்ய முடிந்ததெல்லாம், "வெறுங் காவடி" ஒன்றை டில்லி நோக்கி எடுக்க முடிந்ததுதான்! பலம் பொருந்திய மத்ய சர்க்கார் இவர்களுக்குத் தந்த உணவெல்லாம், இல்லை இல்லை என்ற செவிக்குணவுதான்! அரிசி உணவல்ல!

சென்னை மாகாணத்தில், அரிசிக்காகப் பரிதவிப்பும், அழுகுரலும், ஏக்கச் சொல்லும் இருந்த அதே நேரத்தில், உத்தர பிரதேசத்தில்—நேரு வளர்ந்த மாகாணத்தில் — அரிசி அதிகமாகவே விளைந்து, பிறருக்கு 'விற்குமளவு' குவிந்திருந்தது. உடனே சென்னை சர்க்கார் உத்தர பிரதேசத்திற்கு ஓடினர். கெஞ்சினர். உணவை எப்படியோ வாங்கிவந்து விட்டனர். சென்னைக்கும் அரிசியும் வந்து சேர்ந்துவிட்டது. உத்தரப் பிரதேசத்தின் உதார குணத்தை நினைத்து மகிழ்கிற நேரம்! விலையை அறிவித்தது உத்திரப் பிரதேசம். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் அரிசியின் விலையைவிட மிக அதிகம்.

துடிதுடித்துக்கேட்டார் சென்னை உணவு மந்திரியார், 'நியாயமா?' என்று, ஒரு வார்த்தையில், "எங்களுக்கு அந்த விலைதான் கட்டுபடியாகிறது" என்று கூறி மண்டையில் அடித்துப் பணத்தை வாங்கிக் கொண்டது உ. பி. சர்க்கார்.

'பலம் பொருந்திய மத்ய சர்க்கார்' இதைக் கேட்டிருக்க வேண்டாமா? அல்லது இங்கேயுள்ள மதிமந்திரிகளாவது இந்த அநியாயத்திற்குப் பரிகாரம் செய்யும்படி கேட்டிருக்க வேண்டுமல்லவா?

இனிய தமிழ் விருந்து! ★ ஈடற்ற கலை விருந்து!!

தமிழ் பேரறிஞர்கள், நவயுகக் கவிஞர்கள், நாடக ஆசிரியர்கள், திரைப்பட உலகச் சிற்பிகள், அரசியல் மேதைகள், எழுத்துலக இளைஞரேறுகள், பலரது அழகிய எழுத்தோவியங்களைத் தாங்கி பொங்கல் புதுநாளன்று பூத்துக் குலுங்கும்

**பொங்கல் மலர்**

**இன்பப்பாசறையின் அன்புக் காணிக்கை**

உங்கள் தேவைக்கு முன் கூட்டிப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.
விளம்பரத்திற்கு முன்னிடம் தேடுங்கள்.

**இன்பப் பாசறை**

ADVT. 69, டவுன்ஹால் ரோடு, மதுரை.

கேட்கவில்லை! கேட்கும் தைரியம் இவர்களுக்கில்லை! காரணம்? நாம் இருக்கிறவரையில் மந்திரி நாற்காலி நிலைத்தால் போதும்' என்ற எண்ணம்தான். வேறென்ன?

இப்படிப்பட்ட நிலையில் நம்மை நிறுத்தும் மத்ய சர்க்காரில் சிக்கிக்கொண்டு திராவிடம் சீர்குலையலாமாம் ஆனல் அதைவிட்டுத் தனியே பிரிந்துசென்று இன்பத் திராவிடம் அமைப்பதுமட்டும் கூடாதாம்!

உணவுப்பஞ்சம் தென்னாட்டைக் கப்பிக்கொள்ள ஆரம்பித்த சில நாட்களுக்கு முன்னல் இந்திய—மத்ய சாக்காரை நோக்கி பர்மா சர்க்கார் கேட்டது 'அரிசி தருகிறோம் வாங்கிக்கொள்கிறீர்களா?' என்று! அந்த அரிசியை அப்பொழுது வாங்க மறுத்துவிட்டனர், சுயதேவைப் பூர்த்தி' திட்டத்தை அமுலுக்கு கொண்டுவர முயற்சி செய்யும் மத்திய சர்க்கார் மகானுபவர்கள்!

தென்னாடு பஞ்சத்தால் துடித்தது. பீஹார் வெள்ளத்தால் உணவின்றித் தவித்தது, ஒரு மாகாண உணவு மந்திரி பதவியை ராஜினமா செய்யப்போகிறேன் என்று பயமுறுத்தினர். அதன்பின்தான் பர்மாசர்க்காரை அரிசி அனுப்பியுதவும்படி கேட்டனர் மத்யசர்க்கார்.

ஐயர் வருகிறவரையில் மாவாசை கூட காத்திருப்பதில்லை! வேதாந்த சிரேஷ்டர் கனம் முன்ஷிக்கு சிந்தனைத் தெளிவு பிறக்கிறவரையில் பர்மா காத்திருக்க முடியுமா? பர்மா தன்தேவைக்கு மேலிருந்த உணவுப்பொருளை இலங்கை முதலான நாடுகளுக்கு அனுப்பிவிட்டது. எனவே கையை விரித்தனர் பர்மியர்கள். முன்ஷியும் மக்களைப் பார்த்துக் கையை விரித்தார் மிகமிகத் தாராளமாக!

இதை மகாவீர தியாகி அதே பார்லிமெண்டில் கேட்டார். முன்ஷி முழித்தார். திருமல்ராவ் பதில் சொல்ல முடியாமல் தத்தளித்தார். நேரு கைகொடுக்க முன்வந்தார். 'ஆனல் அவரும் சரியான பதில் சொல்ல முடியாமல், ஏதோ மழுப்பினர்.' மழுப்பினர் — இது நம் வாசகமல்ல. தேசிய ஏடு 'தினசரி'யினுடையது. அது தீட்டியுள்ள 'பர்மா அரிசி' என்ற தலையங்கக் கட்டுரையில் காணப்படுவது!

இப்படிப்பட்ட 'பலம் பொருந்திய தேசிய சர்க்கார்' நமக்குத் தேவையாம்! கூறுகிருர்கள், பேசத்தெரியும் என்ற காரணத்தாலல்ல. கேட்கிறவர்களும் இருக்கிருர்கள் என்ற காரணத்தால்!

சென்னை மாகாணத்தின் பரிதாப நிலையைப்பற்றித் தெரிந்துகொள்ளச் சக்தியில்லாத மத்ய சர்க்கார் மந்திரிகள் வேறு என்னதான் செய்கின்றனர்? தெரிந்துகொண்டு அதற்கானவை செய்யும் விருப்பமில்லையா? மக்களைப்பற்றிக் கவலைப்படாத இப்படிப்பட்ட டில்லி சர்க்கார் நமக்குத் தேவையா?

திராவிடத்திற்குத் தனியுரிமை இருந்திருந்தால் இந்தப் பரிதாப நிலை ஏற்பட்டிருக்குமா?

''உணவு கண்ட்ரோல் விஷயம் அகில இந்திய முறையில் கவனிக்கப்படும் விஷயம். தனிப்பட்ட மாகாண சர்க்கார், மாறுதலான கொள்கையைக் கையாள முடியாது. அதற்கு இந்திய சர்க்காரின் அனுமதி பெற்ருகவேண்டும்' என்று பேசுகிருர் உணவு மந்திரி ரோச் விக்டோரியா, நவம்பர் 17-ம் தேதி.

அதே நேரத்தில் டில்லி இந்திய பார்லிமெண்டில், ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த தோழர். பி. தாஸ். பேசியிருக்கிருர்.

''உணவு உற்பத்தியானது மாகாண சர்க்கார்களை பொறுத்த விஷயம் என்று மந்திரிகள், பார்லிமெண்டில் கூறிவந்திருக்கின்றனர், அப்படியானல் இவ்வளவு அதிகாரிகளையும், சிப்பந்திகளையும் கொண்ட விவசாய இலாகா எதற்காக மத்யசர்க்காரில்இருக்கிறது?''

விசித்திரமான ஆட்சி!

உற்பத்தி செய்கிற விஷயம் மாகாண சர்க்காருடையது. ஆனல் அவர்களோ உற்பத்தியில் பெரும் பங்கை மத்ய சர்க்காருக்குக் கொடுத்துவிட.வேண்டும். மாகாணத்தார் செய்கிற உற்பத்திப் பொருளை செலவழிக்க வேண்டியது மத்ய சர்க்கார். விசித்திரமாக இருக்கிறதல்லவா உங்கட்கு. ஆனல் காமராஜர்களுக்கு 'இது' புரியவில்லையாம்.

நாட்டையாளும் அதே டில்லி ஏகாதிபத்தியம், 'சுய தேவைப் பூர்த்தி' என்று கூறித் தென்னாட்டு மக்களைப் பட்டினிப் போட்டுத் துடிக்கச் செய்தது. வனமகோற்சம் கொண்டாடச் சொல்லி டில்லி அமைச்சர் முன்ஷி நித்திய முகாரி பாடுகிருர். அப்பொழுதுதான் 'சுய தேவைப் பூர்த்தி'த்திட்டம் வெற்றியடைய முடியுமாம்.

மத்ய சர்க்காரிடமுள்ள புள்ளி விவரங்கள் அவ்வளவு சரியானவை அல்ல என்பதை டில்லி உணவு மந்திரியே ஒப்புக்கொண்டுள்ளார். அப்படியானல் அந்தத் தவருன விவரங்களை வைத்துக்கொண்டு எப்படி டில்லி உணவு மந்திரியார், சுயதேவை பூர்த்தியை நிறைவேற்றஇருக்கிருர்? உணர்ச்சி அல்லது கற்பனை மூலமா? உணவு மந்திரியின் உணர்ச்சியும் கற்பனையும் காதற்கவிதைகள் எழுதுவதற்கு உபயோகமாக இருக்கலாம்! உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கல்ல!

நாம் சொல்லவில்லை இதுபோல! முன்னாள் ராஷ்டிரபதி தோழர். கிருபாளனி கூறியிருக்கிருர், டில்லி பார்லிமெண்டில்! இப்பேர்ப்பட்ட உணவு மந்திரியாரின் அனுமதியின்றிதான், நாம் எதுவும் செய்ய முடியாதென்று நவில்கிருர், கொஞ்சமும் சுயமரியாதை இன்றி தோழர் ரோச் விக்டோரியா.

நம் மாகாண ஆளவந்தார்கள், மத்திய அரசாங்கத்தைத் தட்டிக் கேட்பதில்லை, என்பது மாத்திரமல்ல. தேவையான உணவுப் பொருளைக்கூட, கேட்பதற்குத் துணிவிருப்பதில்லை. இதைத்தான் சென்னை அசெம்பளியில் ஓர் உறுப்பினர் 'மத்திய அரசாங்கத்திடம் பிச்சை யெடுப்பதுதான் எடுக்கிறீர்களே அதிலும் ஏன் இந்தப் பிச்சைக்காரததனம்' என்று அழகாகக் கேட்டார்.

சென்னை மாகாணம் சிதைந்து வருகிறது, மத்ய சர்க்காரின் கொடுமை தாங்காமல்! மாமியார் தன் மனைவிக்குச் செய்யும் கொடுமையை மறைத்து வைக்கும் மானங்கெட்ட கணவன்போல, இம் மாகாண ஆளவந்தார்—குமாரசாமிராஜாக்கள்,பக்தவத்ஸலங்கள்—மறைத்து வைக்கப் பார்க்கின்றனர், இந்த நாடறிந்த கொடுமைகளை! அமெரிக்க நாட்டு அடிமைகள் தங்கள் அடிமை முறிச்சீட்டை உடைத்து முதலாளித்வத்தை எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற்றதுபோல, திராவிடமும் டில்லி ஏகாதிபத்யத்தை எதிர்த்துத் தொடுத்திருக்கும் அறப்போரில் வெற்றிபெறும். ஏனெனில் இன்று ஆயிரக்கணக்கான ஆப்ரர்கம் லிங்கன்கள் திராவிடமெங்கும் தோன்றிவிட்டார்கள்.

தொடர் நாடகம்.

# திலோத்தமா

## தமிழ் நாடகம்

திட்டியது:—கு. தனபாலன்.

### நாடக உறுப்பினர்கள்

| | |
|---|---|
| பொதுநலத்தொண்டன், கருநாகனின் கையாள் | அருணன், தயாளன் |
| முல்லைநாட்டு மன்னன் | முகில் வண்ணன் |
| முல்லைநாட்டு மந்திரி | மணி வேலர் |
| அரண்மனை இராஜகுரு | ஆலவாயர் |
| போர்வீரன், சேனாதிபதி | கருநாகன் |
| சிற்பி... (அருணனின் தந்தை) | சிங்கார வேலர் |
| தமிழ்ப் பெரியார் | ஞானசாகரர் |
| சம்பத்து சாஸ்திரி | புராணிகர் |
| வேதாந்தம்<br>வைதிகம்<br>புது ஒளி | குடியானவர்கள் |
| சீராளன் | இராஜ குருவின் சீடன் |
| முல்லைநாட்டரசி | அஞ்சனாதேவி |
| முல்லைநாட்டு மன்னனின் முதல் மனைவியின் மகள் | காஞ்சனா |
| இராஜகுருவின் மகள் | திலோத்தமா |

[மற்றும் சேடிகள், போர்வீரர்கள், குடிமக்கள், ஆரியர் முதலானோர்]

—X—

அங்கம்:

**காலம்:** இரவு.
**இடம்:** முல்லைநாட்டில் ஓரிடம்.

[பட்டாச்சாரி ஒருவன் சம்பத்து சாஸ்திரியை (புராணிகனை) அழைத்துவருகிறான். சாஸ்திரி ஆடம்பரமாக தனது மேல் உத்தரீயத்தை இடுப்பில் கட்டிக் கொண்டு தன் எதிரிலுள்ள சிவன் சிலைக்கு தூப—தீப, நைவேத்தியம் செய்கிறான். பொதுநலத் தொண்டன் ஒருபுறம் மறைந்திருந்து இவைகளைப் பார்க்கிறான். சாஸ்திரி பூசை முதலியவைகளை முடித்துவிட்டு.]

சாஸ்திரி: ஸ்ரீ ராதா ரமண கோவிந்தா!

எல்லோரும்: கோவிந்தா.........!

சாஸ்திரி: ஹர ஹர நமப் பார்வதீபதயே....!

எல்லோரும்: ஹர ஹர மஹா தேவா......!

சாஸ்திரி: (கனைத்துக் கொண்டு) பக்த கோடிகளே, நேற்றைய தினம் நான் எதுவரை சொன்னேன்.......ஹும்.......பாண்டிய மன்னனுடைய வெப்பு நோயைச் சம்பந்தர் தமது தேவாரத் திருப்பாடலால் தீர்த்துவிட்டார் என்றும் அதனால் சமணர்கள் தோல்வியின் முதற்படியை அடைந்தாரென்றும், பின்பு என்னப்பன், ஸ்ரீ சம்பந்த மூர்த்தி சுவாமிகள் சைவ—சமண, உயர்வு, தாழ்வுப்போட்டி நடத்துவதில் வெற்றி தோல்வி காண்பதற்காக மேலும் இரண்டு சோதனைகள் செய்யப்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் அவ்வாறே நடைபெற்றதென்றும், அவைகளில் முதல் பரீட்சையான அதாவது ஓலையை நெருப்பிலிடல் என்ற பரீட்சையில் சம்பந்தர் வெற்றி பெற்றாரென்றும், இரண்டாவது பரீட்சையான ஓலையை நீரில் இடுதல் என்பதைப்பற்றி இன்று சொல்லுகிறேன் என்றும் சொன்னேனல்லவா? மெய்யன்பர்களே! தயவு செய்து நன்றாய்க் கவனிக்கவும். ஸ்ரீல ஸ்ரீ சம்பந்த மூர்த்தி ஸ்வாமிகளும், பாண்டிய மன்னரும், மந்திரி குலச்சிறையாரும், சமணர்களும் வைகை ஆற்றை அடைந்தனர். சம்பந்தமூர்த்தி ஸ்வாமிகள் ஓர் ஓலையை எடுத்து அதில் "வாழ்க அந்தணர்" என்னும் தேவாரத்தை எழுதி அதனை ஆற்றிலிட்டார். சமணர்களும் தம் சமய ஏட்டை ஆற்றிலிட்டனர். என்ன ஆச்சரியம்! சம்பந்தர் இட்ட ஏடானது எதிர் நோக்கி நீரைக் கிழித்துக்கொண்டு சென்றது. ஆனால் சமணர்களால் ஆற்றிலிடப்பட்ட ஏடோ, தண்ணீரிலேயே அடித்துச் செல்லப்பட்டுகட

(7-பக்கம் பார்க்க)

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

அந்தணோத்தமர்களுக்கு அனியாயம் இழைத்த அந்த அயோக்கியனை மட்டுமல்ல, அவனுடன் சேர்ந்த எவரையும் அந்த சாபம் சுட்டுப் பொசுக்கியே தீரும். ஏ ராஜன்! நான் செல்வதைக் கேள். நீ மட்டும் அந்த அகம் பாவிகளைக் கழுவிலேற்ற உத்திர விடாவிடில் நீயும் உன்னைச் சார்ந்தோரும் உன் மக்களும், ஏன், உன் நாடும், அழிந்தொழிந்து மண்ணுடன் மண்ணாய், காற்றுடன் காற்றாய்க் கலந்து கரைந்து போவீர்கள் பத்திரம்! என்ன அனியாயம்! என்ன ஆணவம்! எத்தகைய அவமதிப்பு! நான் உயிருடன் இருக்கும் போதேவா இத்தகைய அக்கிரமம் நேரிடவேண்டும் என்னினத்தாருக்கு!

முகில் : குருதேவா! மன்னிக்க வேண்டும். ஒரு சார்பாரின் குற்றச்சாட்டை மட்டும் எடுத்துக்கொண்டு நாம் தீர்ப்பு வழங்கக்கூடாது. அது நீதியுமல்ல—நேர்மையுமல்ல, அறமும் அல்ல!

ஆல : (கோபமாக) ஹாம் .........நீதி—நேர்மை.....அறம்! (கேலிச்சிரிப்பு) மன்னவனே, கண்ணடியா தேவை கைப்புண்ணிற்கு? பூதேவர்களை புல்லறிவாளன் இவ்வித கொடுமைக்காளாக்கி அனுப்பி இருக்கின்றானென்று அறிந்துமா நீ நீதியை நாடுகின்றாய்? ஆண்டவனருளால், அனைவரும் ஆநந்தமாக வாழவேண்டுமென்று விரும்பும் இந்த உத்தமர்களை, உலுத்தன் உதைத்தனுப்பி இருக்கின்றானென்று உணர்ந்துமா நீ நேர்மையை அவனிடம் எதிர்பார்க்கிறாய்? அளவு மீறிய அகம்பாவ—ஆணவ—அயோக்கிய செயல்களைப் புரிந்த அந்த அற்பப்புழுவினிடமா அறத்தை எதிர்பார்க்கின்றாய்? ஹாம்.......... வெட்கம்.......வேதனை...கேலிக்கூத்து! ஹாம், முகில் வண்ணா, தமிழன் வீரம் அன்று பாஞ்சாலத்தைப்பயப்படும்படி செய்தது - கடாரத்தைக் கதிகலங்க வைத்தது—அங்கத்திற்கு அஞ்சினதில்லை—வங்கத்திற்கு வணங்கினதில்லை. ஆனால் இன்று கேவலம் ஓர் விட்டில் பூச்சியை வீழ்த்த யோசிக்கிறது......!

முகில் : குருதேவா, நான் தண்டனை தரமாட்டேனென்றும், முடியாதென்றும் சொல்லவில்லையே! குற்றவாளிக்குத் தண்டனை தருமுன்பு குற்றம் எத்தகையதென்றும், குற்றம் இழைத்தவன் குற்றம் சாட்டப் படுபவன்தானா வென்றும் நிச்சயிக்கவேண்டியது மிக முக்கியமென்று அரசியல் சட்டத்தை வகுத்த நீரே எனக்கு சொல்லித் தந்துவிட்டு........

ஆல : ஆம் சொன்னேன். ஆனால் அது பிராமணர்களுக்கு விதிவிலக்கு! அவர்கள் ஒருக்காலும் பொய் சொல்லவே மாட்டார்கள்!

முகில் : பூஜ்யரே மன்னிக்க வேண்டும். காலம் மாறிவிட்டது! குற்றம் புரிந்தவன் அரசனானாலும், ஆண்டியானாலும், தண்டனை பாரபட்சமின்றி, கொடுக்கப்படும் இந்த முகில் வண்ணனால்! அதில் யாதொரு சந்தேகமும் தங்கட்கு வேண்டாம். மற்றொன்று......இந்த முகில் வண்ணன் ஆட்சியில் எல்லோரும் நீதியின்படி வாதாட உரிமை உண்டு. ஒரு தனிப்பட்ட மதத்தினருக்கு மாத்திரம்—ஒரு தனிப்பட்ட இனத்தினருக்கு மாத்திரம் எந்த விதமான காரணத்தைக் கொண்டும் சலுகை கட்டாயம் கட்டாயம் காட்டவே முடியாது. சேனாதி (சேனாதிபதி வந்து வணங்குதல்) பதி! நீ, உடனே சில வீரர்களை அனுப்பி அந்த அருணன் என்பானை சிறைப்படுத்தி நாளைய விசாரணைக்கு கொண்டுவா. நாளைய விசாரணையின் தீர்ப்பே முடிவானது!

[அரசன் கோபத்துடன் எழுந்து செல்லுகிறான் — யாவரும் (ராஜ குருவைத் தவிர) எழுந்து மரியாதை செய்கின்றனர். பிராமணர்கள் சபிக்கின்றனர் தம் மனதுக்குள்ளேயே! ஆலவாயர் முகம மிகவும் விகாரமாகக் காட்சி யளிக்கின்றது. அரசியும், இளவரசியும், திலோத்தமாவும இதை சாடையாகக் கவனிக்கின்றனர் அவ்விடத்தைவிட்டு அகலும் முன்பு... ..... ......]

சபை கலைகிறது.

(தொடரும்)

---

**கம்பம் தி. மு. க.**

இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகம் 10-11-50 இரவு எட்டு மணிக்கு நடந்தது. அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்.

செயலாளர்கள்: M.K. நிலந்தரு, P. இளங்கோவன்

உதவிச் செயலாளர்: M.பொன்னையா.விளம்பரஉறுப்பினர்: K. மொக்கசாமி பொருளாதார உறுப்பினர்: M. ராஜு. மற்றும் செயல்உறுப்பினர்கள்: K. மதியழகன், ப. நீதி மோகன், M. சீனி, M. குருசாமி. கூட்டம் முடிவடையாமலிருக்கும் பொழுது அதாவது 10 மணிக்கு திடீரென்று மூன்று போலீஸ் ஜவான்கள் கழக இல்லத்தில் பிரவேசித்து கூட்டத்திலிருந்த 20 தோழர்களையும் பலவந்தமாக வெளியேற்றினார்கள். சுமார் ஒரு பர்லாங்கு தூரம் தோழர்களை அழைத்துக் கொண்டு சென்றார்கள். அவர்கள் தோழர்களை கம்யூனிஸ்ட் என்று கைது செய்தால் என்ன என்று கூட சொன்னார்கள். ஒரு பர்லாங்கு தூரம் தோழர்கள அஞ்சாமல் செல்லவே திரும்பப் போகச்சொல்லி விட்டார்கள். பிறகு மற்ற நிகழ்ச்சிகளும் 11 மணிக்கு முடிவுற்றன. தோழர் K. மதியழகன் நன்றி கூறக்கூட்டம் இனிதுகலைந்தது.




வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!

# திராவிடர் டைரி—1951

திராவிடர் அனைவரும் பெற்றிருக்க வேண்டிய மிகச்சிறந்த நாட்குறிப்பு ★ ஒவ்வொரு தி. மு. க. தோழருக்கும் பூரிப்பளிக்கத்தக்க புதுவகை வெளியீடு

இளைஞர் உலகத்தின் இதயகீதமாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிய எல்லாவிவரங்களும் அடங்கிய எழில்மிகு ஏடு.

உங்கள் பிரதிக்கு உடனே முந்திக் கொள்ளுங்கள்! ★ சென்ற ஆண்டுபோல கிடைக்க வில்லையே என்று வருந்தாதீர்கள்!

அழகான அமைப்பு 530 பக்கங்கள் விலை அணு 14

ஒரு பிரதி வேண்டுவோர் சாதாரணத் தபாலில் அனுப்ப ரூ 1—0—0-ம், பதிவுத் தபாலில் அனுப்ப ரூ. 1—4—0-ம் அனுப்பவேண்டும்.

எல்லா ஆர்டர்களுக்கும் 18—12—50 முதல் அனுப்பப்பெறும்

விற்பனையாளர் கழிவு 20 o/o அனுப்பும் செலவு வேறு.

முன்பணமின்றி எவருக்கும் அனுப்பப்பட மாட்டாது.

**போர்வாள் அலுவலகம்** பவழக்காரத் தெரு சென்னை 1.


## திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டங்கள்

### நடக்க இருப்பவை

### 16-12-50 சனிக்கிழமை

**சொக்கநாதபுரம்:**—மாலை 4 மணி. இரா. நெடுஞ்செழியன் எம். ஏ, என். எஸ். இளங்கோ, எஸ். கே. சாமி, கவிஞர் கண்ணதாசன், க. இரா. சத்தியேந்திரன் பி. ஏ. பி. எஸ்.

**மானாமதுரை:**—மாலை 7-30 மணி. க. இரா. சத்தியேந்திரன், இரா. நெடுஞ்செழியன், மதுரை முத்து, எம். எஸ். இராமசாமி.

**குறிஞ்சிப்பாடி:**—சி. என். அண்ணாதுரை எம். ஏ.

### 17-12-50 ஞாயிற்றுக்கிழமை

**வளவனூர் (தெ. ஆ):**— மா. இளஞ்செழியன் B. A. (Hons)

**செயங்கொண்டம்:**—ஈ. வே. கி. சம்பத், ஏ. சே வேலன், பன்னீர்செல்வன், ஏ. மெத்துசலா.

**மதுரை கீழ்ச்சந்தைப்பேட்டை:**—எம். எஸ் சிவசாமி, இரா. சு. தங்கப்பழம், கே. எஸ். இராமன், எஸ். சி. மாணிக்கம்.

**திருச்சி காலையில்:**—தேவர் ஹால், மாலை பொதுக்கூட்டம். என். எஸ் இளங்கோ, எஸ். கே. சாமி, தஞ்சை எஸ். எஸ். மணி.

**நெல்லிக்குப்பம்:**—என். வி. நடராசன், ஓ. பு சாமிநாதன், சி. இளம்வழகன்.

**திருச்செங்கோடு:**—சி. என். அண்ணாதுரை எம். ஏ, ஈ. வெ. கி. சம்பத், என். கே. பி. வேல்.

**சென்னை ராபின்சன் பார்க்:**—ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பி. இராமசாமி, பி வி. முத்துச்சாமி.

**ஆர்காடு:**—சி. பி. சிற்றரசு.

### 18-12-50 திங்கட்கிழமை

**பவானி:**—சி. என் அண்ணாதுரை எம். ஏ.

**சின்ன சேலம்:**—ஈ. வெ. கி. சம்பத், ஈரோ அப்பாவு.

Edited, Printed and Published bY P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, C al Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A.(Hon)